# நினைவு மலர்

சம்பூரை பிறப்பிடமாகவும்
உவர்மலை கோணேசபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர். சிவக்கொழுந்து காளிராசா

(முன்னாள் அதிபர் தி/ பாலம் போட்டாறு சித்தி விநாயகர் வித்தியாலயம்,
தற்போதய பிரதி அதிபர் தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி)

23.07.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINCIPAL
SAMPALTHIVU TAMIL MAHA VIDYALAYAM
TRINCOMALEE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர். சிவக்கொழுந்து காளிராசா
# அவர்கள்

மலர்வு
1962.04.13

உதிர்வு
2008.06.28

## திதி வெண்பா

மண்ணகம் போற்றும் பேராளன் காளிராஜா
விண்ணகம் சென்று மறைந்த நன்னாள்
சர்வதாரி வருடம்சேர் ஆனித்திங்கள் தனிலே
அவிட்ட பஞ்சமித் திதியாம் போற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வெள்ளை நிற மேனி கொண்டாய்
வெள்ளையென மனது கண்டாய்
கள்ளமில்லா பேச்சாலே
கவர்ந்து கொண்டாய் அனைவரையும்
கல்வியிலே கடும் முயற்சி
வாழ்க்கையிலே தனிப்பயிற்சி
பல்கலை கற்க எண்ணியே
பல்கலைக்கழகம் சென்றாய்
அன்பாக அழைத்த படியே
மக்களைப் புகழ்ந்திடுவாயே
குன்றென நிமிர்ந்த உன்னை
குடும்பமே வியந்து பேச
அமைதியாய்ப் பிரிந்துசென்றே
அகிலத்தை மறைத்ததேனோ
மரணத்தை அடைந்து நின்றே
புகழினைப் பெற்ற தென்ன
மனைவியைப் பிரிந்து சென்றே
கொடுமைகள் புரிந்திட்டாயே
ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறுமோ உந்தன் பேச்சு
ஆண்டவன் அழைப்பை ஏற்று
அவசரம் கொண்டதேனோ
மாற்றமாய் வந்தெம்மை
ஆறுதல் கொடுப்பாய் ஐயா
சாற்றினாம் சமர்ப்பணமாய்
போற்றுவோம் உங்கள் புகழை

**மனைவி, மக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவாரம்

அப்பன்நீ யம்மைநீ யையனும்நீ
யன்புடை ய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளும்நீ
யொருகுல முஞ்சுற்றமு மோரூரும்நீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொனநீ யிம்மணிநீ யிம்முத்தும்நீ
யிறைவன்நீ யேறூர்ந்த செல்வம் நீயே.

## திருவாசகம்

"ஆட்பா லவர்கம் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகிலஎ வில்லைக் கிளக்க வேண்டா
கோட் பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்கத் தக்கார்

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

கற்பனைகடந்த சோதி கருணையேயுருவமாகி
அற்புதக் கோல நீடியருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று
பொற்புடன் நடனஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

# திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகி திரமான பெருவாழ்வைத் தருவாயே
குற மாதைப்புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.


# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் காளிராஜா அவர்களின் வாழ்க்கைச் சரிதம்



முத்துக் குளிக்கும் மூதூர் நன்னகரில்
நெல் வயலும் கடல் வளமும் சேர்ந்த
சம்பூரம்பதியிலே சைவ வேளாளர் மரபில்
பெரும் புகழாளன் சிவக்கொழுந்திற்கும்
இல்லற நாயகி பத்தினிப் பிள்ளைக்கும்
பழுநில்லா ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து இரண்டில்
செம்மை சேர்ந்த சித்திரைதனிலே
பதின் மூன்றாம் நாளும் கூடிவரவே
செல்வமகனாய் காளிராஜா
மண்ணுலகில் வந்து அவதரித்தான்
சம்பூர் காளிகோவிலருகமைந்த மனையில்
பெருவிருப்போடு பிறந்ததனால்
காளிராஜா என்றே நாமஞ்சூட்டினார்
ஜெயமணிதேவியின் தம்பியாகவும்
ஜெயராசா பின்னே யோகராசா
சிவமங்களாதேவியின் அண்ணனாகவும்
உடன் பிறப்புடனே வாழ்ந்து வந்தான்
தங்க நிலவாய் வளர்ந்து வரும் வேளை
பாங்குடனே பள்ளிதேடி பெற்றோர் வைத்தார்.
சம்பூர் மகாவித்தியாலயத்தில் சேர்ந்தே
முதன் நிலை முதல் சாதாரணம் வரை
விருப்புடனே சிறந்த கல்வி பெற்றான்
பள்ளிக் காலத்தே புன்னகை தவழ்ந்துவரும்
நொந்தோர் வார்த்தை சொல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகண்டே ஆசிரியரும் அரவணைத்தார்.
சுறு சுறுப்புக் கொண்டவனாய்
விளையாடிக் குறும்பு செய்வான்
செல்வ மகனை அன்பாக பெயர் குறித்தே
பெற்றோரும் மற்றோரும் அழைத்து வந்தார்
உயர் கல்வி தேடிய பொழுதில்
மூதூர் மத்திய கல்லூரிதனில்
மனமுவர்ந்து சேர்ந்து கொண்டான்.
முத்தமிழ் மன்றங்களிலே விரும்பி
இசை மீட்டுப் பாட்டிசைப்பான்
காளிராஜா என்றே அழைத்தே
நண்பர் பலர் கூடி நிற்பார்
பரீட்சையிலே சித்தி கண்டே
மலை வளம் நிறைந்த கண்டி
பேராதனைப் பல்கலைக்கழகத்தே
விரிவுரையாளர் போற்றும் வண்ணம்
பட்டப்படிப்பைச் சீர்தூக்கி
கலைப்பட்டதாரி ஆனான்
கண்டிக் குளிரில் கருகருத்த அவன் கேசம்
விஞ்சு அழகு தந்தே வடிவம் கொண்டான்
மனதில் பட்டதைச் சொல்லும் துணிச்சலும்
ஓடி வந்தே உதவும் மனமும் கொண்டான்
பட்டம் பெற்றே பதவி பெற்று
நுவரெலியா கண்ட திருத்துவக் கல்லூரியில்
பொருளியல் பாட ஆசானானான்
பூத்துக் குலுங்கும் மல்லிகை போலே
மனது கண்டு வளர்ந்து வரும் போதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவாழ்வும் இனிதாய் கூடிவரவே
ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தைந்தில்
திருமலை நல்லாள் செல்வரஞ்சினியை
உற்றார் போற்ற நல்மணம் செய்தான்
சத்தியசீலராசாவின் மூத்த மருமகனாய்
குறைகள் இல்லா செல்வ வாழ்வுகண்டான்
கருத்தொரு மித்த தம்பதியாகவும்
கண்டோர் வியக்கும் குடும்பமெனவும்
வாழ்ந்து வரும் வேளையிலே
செல்வமகனாய் ஜெனோசனையும்
பின்னே இளைய மகனாய் சஜீவனையும்
பெற்றெடுத்தே மனமகிழ்ந்து நின்றார்
ஆசிரியப் பணியில் சாஹிராவிலும்
குன்றுகள் நிறைந்த விவேகானந்தாவிலும்
அரும்பணி செய்தே மகிழ்வு கண்டான்
பொருளியல் பாடத்தை சிறப்பினதாக்கி
திருமலை நகரில் புகழும் கண்டார்
மாணவர் சமூகம் நிறைந்து வரவே
காளிராஜாவின் பெயரும் சிறந்துவந்தது.
கலைகள் மீதினிலே நாட்டம் கொண்டே
அறிவிப்பாளனாய் மேடை பல கண்டான்
சிங்கப்பூரை நாடிச் சென்றே
செல்வம் பாங்காய் சேர்த்து வைத்தான்
சமூகப் பணிகளில் நாட்டம் கொண்டே
ஆசிரிய சிக்கனக் கூட்டுறவு அமைப்பில் தலைவராகி
வட - கிழக்கெங்கும் சேவை செய்தான்
ஏழை ஆசிரியர் குறைகள் கண்டே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றம் புரிய நிதியுதவி செய்தான்
சிறிய நிதியினை வாய் வலிமையினால்
பெரு நிதியாக்கி பெருக வழியமைத்தான்
அழைக்கும் விழாவிலே கலந்து கொண்டே
பணத்தை வழங்கி பெருமைகண்டான்
ஏழை எளியவர் வாழ்ந்திடவே
உண்டி கொடுத்தே உயிர் கொடுத்தான்
பாலம்போட்டாற்றில் அதிபராகி
பாங்குடன் சமூகத்தை மாற்றிவைத்தான்
வெள்ளை உள்ளம் காட்டிடவே
வெள்ளைக் காரில் பவனிவந்தான்
கசங்கி மடியாத உடைதனிலே
கம்பீரமாக என்றும் எழுந்து நிற்பான்
பட்டம் பதவிகள் சேர்ந்த போதும்
பால்போல் சிரித்தே உருகி நிற்பான்
காலம் மாறி உருண்டு போக
நட்பினிலே அன்பைக் காட்டியே நிதம்
எதையும் கடுமையாய் எடுக்காமலே
வாழ்வை ஓட்டியே வளர்ந்து வந்தான்
மாலை நேரங்களிலே அன்பான உரையாடல்
மாற்றங்கள் பேசியே சிரித்து நிற்பான்
நட்பினை என்றுமே ஆழமாக்கியே
பனி போன்ற மனமுடனே வாழ்வு கண்டான்.
மூத்த மகனையும், இளைய மகனையும்
நட்புடனே பாசம் காட்டியே
நல் மக்களாய் வளர்ப்பதற்காய்
தேடித்தேடியே கற்கவைத்தே
நாட்டுக்கல்வியில் மாற்றம் வேண்டியே
லண்டன் அனுப்பியே பெருமைகண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த மகனை அனுப்பிய களிப்பிலே
மகிழ்ந்திருந்த நாள் முடியும் நேரத்தில்
பிரதி அதிபராய் உவர்மலை சென்றே
இரண்டு நாட்களை இனிதாய் களித்த பின்
மூன்றாம் நாளில் கடமை சென்ற பின்
கடைசி வாழ்வு நெருங்கி வரவே
ஆனி மாதக் காலைப் பொழுதே
அவனியிலிருந்தே பரலோகம் காணவே
காற்றும் ஒரு கணம் அடங்கிப் போகவே
கடைசியாய் வார்த்தை மனைவியிடம் கூறாமல்
உற்றார் கலங்க ஊரார் பதைக்க
திருமலையெங்கனும் ஓங்கி அலறவே
நம்ப முடியாத வண்ணமாய்
ஆனி மாத இருபத்து மூன்றாம் நாளிலே
பாய்ந்தோடும் ஆறு நின்றது போலவே
காலனை வெல்பவர் யாரென உணரவே
துயில்வது போலவே காளிராஜா
அவிட்ட பஞ்சமித் திதியிலே
விண்ணகம் சிறக்கவே பரலோகம் சென்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறவில்லை.........

கணவனாய் ஏற்ற நாள் முதலாய்
குறையேது கண்டேன் ஐயா,
கடிந்து ஒரு போதும் வார்த்தை பேசாமல்
அன்பாய் பேசி சிரிக்கவைப்பாயே
இறுதி வார்த்தை பேச மறந்ததேனோ
தொலைபேசி எடுத்தே நீங்கள்
ஆறுதலாய் வந்து சொல்வதாய் சொல்லி
சொல்லாமல் எனைப் பிரிந்த மாயமென்ன?
வீதி வரை அனுப்பியே நிதம்
வரும் வரையில் காத்திருப்பேனே
பூதவுடல் காட்டி காற்றில் கரைந்ததேனோ
நினைக்க நினைக்க இதயம் வெடிக்கிறதே
உலாவிவரும் வீதியெல்லாம்
வெற்றிடமாய் இருக்கிறதே
மாறாத துயரைத் தந்தே
மறைந்தோடிச் சென்றீரே
மீண்டும் வரும் நாளையெண்ணி
வாசலிலே காத்திருப்பேன்
ஆத்மாவின் சாந்திக்காய்
அனு தினமும் துதிக்கின்றேன்.

அன்பு மனைவி
ரஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்புடனே.........

மகன்மார் போல் எண்ணாமல்
நட்புடனே பாசம் வைத்த அப்பாவே
பூத்துக் குலுங்கி வாழ்வு வரும் வேளை
பேரதிர்ச்சி தந்து மறைந்து போனது ஏனோ
வெளிநாடு அனுப்பி வைத்த நீங்கள்
மீளாத நாடு சென்றதுவும் சரியோ
பால் போன்ற தங்க மேனி
வெறுந்தரையில் புதைந்ததென்ன
கண்ணை மூடித் திறக்குமுன்னமே
கனவாகி கதையாகி பிரிந்ததேனோ
கலகலப்புடனே பேசிய உங்கள் உரு
கண்ணயர்ந்து மாய்ந்த தென்ன
மறு ஜென்மம் ஒன்று இருந்தால் அப்பா
பாசமுடன் தந்தையாய்ப் பிறப்பாயப்பா
தெண்டனிட்டு அழுகின்றோம்
விழி நீரைக் காணாமல்

அன்பு மகன்மார்
ஜெனோசன் , சஜீவன்

## நெஞ்சம் பதறியதே .......

மூத்த மகனாய் இருந்தே
கொள்ளி வைப்பாய் என்றிருந்தேன்
காற்றாய் வந்தே மறைந்ததேனோ
பாசம் கொண்டே உனையழைக்க
எங்கேயோடி மறைந்தாய் மகனே
உறவுக்கெல்லாம் மரமாய் நின்றே
நிழல் கொடுத்த ஆசை மகனே
தீராத சோகம் தந்தே எம்மை
பரிதவிக்க மறைந்தாயே
ஆசையாய் அருகமர்ந்தே
ஊர்க் கதைகள் சொல்வாயே
காளிராஜா நாமம் வைத்தேன்
சம்பூர் காளி கூடக் காக்கவில்லையே,
கனவு போல எல்லாம் வந்தே
மறைந்து போன சோகமென்ன

தந்தை
கா. சிவக்கொழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புச் சகோதரா.........

அன்புச் சகோதரனே
எங்கு சென்று மறைந்து போனாய்
சகோதரிகள் துடிக்கின்றோம்
விரைந்து வர மாட்டாயா?
கணவனை இழந்த அக்கா என்னை
குடை நிழலில் காத்தவனே
பரிதவிக்க வைத்து எம்மை
மறந்து போன செய்கை என்ன
அக்கா என்றாலே அன்பாய் உருகியே
பாசத்தை காட்டி அரவணைத்த தம்பியே
ஆசை முகத்தை காணும் நாளும் உண்டோ
தங்கை வெளிநாட்டில் துடித்தழுது நிற்கிறாள்
மீண்டு வருவாய் நொந்து அழுகின்றோம்
உன் ஆத்மா சாந்தி பெற மலர் தூவி
துதித்து நிதம் வழிபடுவோம்

சகோதரிகள்
ஜெயமணிதேவி
சிவமங்களா தேவி

## அண்ணாவைக் காணோம்...........

ஆண்டு பல உருண்டாலும்
ஆசை முகம் நாம் மறவோம்
நேசமாய் பெயர் சொல்லி
உரிமை கொண்ட அண்ணாவே
பொல்லாத காலனுன்னைப்
பரலோகம் அழைத்தானே
வெளிநாட்டில் இருந்தபடி
ஊர்ச்செய்தி கேட்டேனே
தாயகம் நான் வந்த போது
மௌனமாய் உறங்கி போனீரே
என்ன கொடுமை அண்ணா
மூத்தவனாய் நீயிருந்து
வழிப்படுத்த முடியாமல்
புதைகுழியில் தள்ளிவிட்டே
வந்ததை நாம் மறப்போமா?
மீண்டுமொருதடவை அண்ணனாய்ப்
பிறப்பெடுத்து வருவாயா?
காத்திருப்போம் பாதையிலே

ஆசைத்தம்பிமார்
ஜெயராசா, யோகராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனார் மனக்குமுறல்.....

மறக்க முடியவில்லை உன் நினைவுகளை
உன்னையும் உனது புகழையும் மறைக்கமுற்பட்டனரோ மாபாவிகள்
கிராமத்தில் படிப்பித்தவனை பட்டணத்திற்கு கொண்டு வந்தாயே
நான் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக இருந்த பொழுது
நயவஞ்சகனை உனது நண்பன் என அறிமுகம் செய்தாயே
அதிபர் பதவிக்குயர்த்த உன்னை ஏணியாகப் பாவித்தாயே
அவனின் பதவி ஆசைக்கு மட்டுமல்ல
தனிப்பட்ட வாழ்க்கைக்கும் நீ வழங்கிய ஒத்துழைப்பு
எழுத்தில் வடிக்கமுடியாதவை ஐயா !
எல்லோரையும் 'நண்பர்களென நம்பினாயே
அவற்றில் வஞ்சகர்களை நீ இனங்காணவில்லையே
நண்பர்களில் இனங்காணமுடியாது போன வஞ்சகர்கள்
உன் உயிரைப் பறித்தெடுத்தனரே
நீ இருக்கும் பொழுது எனது உயிர் போனாலென்ன
எனது மருமகன் ராசா குடும்பத்தை வழிநடத்துவானென
எண்ணியிருந்தேனே
எனது எண்ணத்தில் மண்ணைத் தூவினரே உனது வஞ்சக நண்பர்கள்
மனைவி பிள்ளைகள் உற்றார் உறவினர்களை
ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு
உன்னை மீளாதுயில் கொள்ளச் செய்தனரே வஞ்சகர்கள்
நீ வஞ்சகனல்ல நன்றி மறந்தவனுமல்ல' – ஆகவே
உன் ஆன்மா சொர்க்கத்தை அடையும்.
உன் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்றமகர்க்கு"

மாமனார்

கோ. சத்தியசீலராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் உயர்ந்தவனே.........

போன வழியைத் தேடியே தினம்
வானம் பார்த்து ஏங்கிநிற்பேன்
நெஞ்சிலே நினைவிழந்து
நெருப்பிலே பூ விழுந்தது போல்
பஞ்சுக்குள் மரணம் தந்தே
நினைவைப் பொசுக்கி வைத்தாய்
எண்ணத்தால் உயர்ந்தவனே
ஏற்றம் பல தந்த அத்தானே
சட்டம் கற்க உதவி செய்தாய்
நினைவிலே உயர்ந்து நின்றாய்
பிரச்சினைகள் வரும் வேளை
பாங்குடனே அறிவுரைப்பாய்
உன் வார்த்தை கேளாமல்
இது வரையில் நான் என்ன செய்தேன்
உன் தயவால் சாதித்தேன்
உன் பிரிவால் யோசித்தேன்
ஒரு நாளும் வாடா முகம்
புதைகுழியில் போனதென்ன
விடுமுறையில் நான் வருவேன்
விருந்து வைத்தே நீ மகிழ்வாய்
ஆசையுடன் வீடு வந்தே
அன்பு காட்டி நீயுரைப்பாய்
பூம் பூம் மாமாவை மருமக்கள் தேட
எங்கு சென்று மறைந்தனையோ

சி. புலேந்திரன்
குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சம் வாடுதைய்யா......

அக்காவை மணம் செய்தே
உரிமையோடு நின்றவரே
கடைசி வரை மறப்போமா
எழில் நிறைந்த அழகு முகம்
மச்சாள்மார் எம்மை
தங்கைகளாய் நினைத்திருப்பாய்
எம்வாழ்வில் உயர்வுகாட்டி
கண்மூடி மறைந்ததேனோ
கேலியும் கிண்டலுமாய் உன் பேச்சு
காதிலே ஒலித்துச் சிதறியதே
பாசமுள்ள அத்தானை
இனி எங்கே நாம் காண்போம்
ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
அன்புருவை மறவோம் ஐயா
பரலோகபதி அடைந்தே
ஆண்டவன் தாள் இணைந்திருக்க
மன்றாடித் துதிக்கின்றோம்.

மச்சாள்மார்
ஜெயந்தி, நந்தினி,
நளினி, சர்மிளா

## சிறகொடிந்தோம்........

மூத்த சகலனாய் என்றும்
முழு மனதாய் ஏற்றிருந்தோம்
சேர்ந்திருந்தே எமைக்காக்கும்
தேகம் மறைந்து போனதே
இறுமாப்பு என்றும் இல்லா
இளகிய நெஞ்சமதாய்
நிமிர்ந்து நின்றதைப் பார்த்திருந்தோம்
வெளிநாட்டில் இருந்தே பறந்து வந்த போது
விரைந்து வந்தே எமை வரவேற்பாயே
குறை ஏதும் இல்லா உள்ளம்
குடும்பத்தைப் பிரிந்து போனதேனோ
எண்ணுக்குள் அடங்காப் புகழுடையவனே
கண்ணுக்குள் வைத்தே உனை நினைப்போம்
வாசனையாய் பூத்த மலர் தொடுத்தெடுத்தே
செம்பாதங்களில் சூட்டி வைப்போம்

சகலன்மார்
ஜெயானந்தசிறி,
சுரேஷ்குமரன், சாந்தலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணில் புதைந்தாயே ..........

ஆசை மகனே, அன்பான ராசாவே
ஆசையம்மாவிடம் கொள்ளை அன்பு கொண்டவனே
பிஞ்சு வயதில் தளர் நடை பருவத்தே
கொஞ்சி மகிழ்ந்தே உனை அணைப்பேன்
சம்பூர் வரும்போதெல்லாம்
விரைந்து மனை வருவாயே
அக்காவுடன் நானும் இணைந்தே
மகிழ்ச்சியாய் உன்னை வரவேற்போமே
ஒரு வார்த்தை கூறாமல்
ஆசையப்பா போன இடம் தேடி
நீயும் சென்று மறைந்தனையோ
இடம் பெயர்ந்து நின்ற போது
துடித்தெழுந்து கை கொடுத்தாயே
பால் போன்ற உந்தன் மேனி
புதை குழியில் மறைந்ததேனோ
உன் மரணம் இன்று வரை
கனவு போல இருக்குதய்யா
அடிக்கடி நான் மரணம் கண்டே
அரை உயிராய்ப் போனேனையா
ஒரு தடவை மீண்டு வருவாயோ
தெண்டனிட்டே காத்திருபோம்

**ஆசையம்மாமார்**
**திருமதி. செல்லமாணிக்கம் சிவலிங்கம்**
**திருமதி. நேசம்மா காளிராசா**

## மச்சாளின் மனக்குமுறல்கள்..........

அத்தான் என்பது உலக பந்தத்தில்
அப்பா என்னும் ஸ்தானம் எம் உள்ள பந்தத்தில்
ஆசான் என்பது என் பள்ளிப் பந்தத்தில்
அதிபர் என்பது என் தொழில் பந்தத்தில்
யாருக்கு கிடைக்கும் இத்தனையும்
ஒரே இடத்தில்?
நான் பெற்ற பாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்க வில்லையே இப் பூமிக்கு
இழந்து தவிக்கின்றேன் ஜீரணிக்க முடியவில்லையே !
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே
எக்காரியமெனினும் தக்கதாய் திட்டமிட்டு
எல்லோரும் மகிழ்வுறத் துணிந்து செய்வாயே
எம் குடும்பத்தில் எல்லோர் மனதிலும் இடம் பிடித்தாயே
எம் மனம் ஆறுதில்லையே உம்மை இழந்து.........

ஆயிரம் நட்புக்கள் உமக்கு
ஆராய்ந்து பழகவில்லையே நீரும்
அறியாமல் நீர் செய்த பிழை அத்தான்
ஆராய்ந்து நீர் பழகியிருந்தால்
ஆள் கொல்லியை அறிந்திருப்பீர்
நாமும் உம்மை இழந்து துடிக்க மாட்டோம்

பெரியப்பா எங்கே என்று பெருங்கேள்விக்குறி (?)
என் மகளுக்கு,
பெருமையுடன் சொல்ல எனக்கிருந்த
பெரிய சகலன் பிரிந்தாரே என்ற
பேரதிர்ச்சி என் கணவர்க்கு !
செய்வதறியாது தவிக்கின்றது எம் குடும்பம் ........

அத்தான் நீங்கள் மண்விட்டு விண் சென்றாலும்
ஆணித்தரமானவிடயத்தை கற்பித்துச் சென்றீர்கள் எமக்கு,
'நண்பனானாலும்' புடம் போட்டு தெரிவு செய்ய வேண்டும்"
நீங்கள் இறுதியாக எமக்கு கற்றுத் தந்த பாடமாக
இதை நான் ஏற்றுக் கொள்கிறேன்

உம் இனிய நினைவுகள் எமதாக்கி உயிர் கொடுத்த இறைவனுடன் நீங்கள் ஒன்று கலந்திட இருகரம் கூப்பி நிற்கின்றேன்.

– நன்றி –

திருமதி. செல்வருளினி சுரேஸ்குமரன்
ஆசிரியை
திரு/ புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மருமகனே.......

மூத்த மருமகனாய் நின்று எம்மை
பதிந்துயர்ந்த மருமகனே
எம்மை ஏமாற்றிய விதம் இதுதானா
மாலை நேரம் எமைப்பார்க்க வந்தாயே
காலை வேளை மறைந்து போன மாயமென்ன
உங்கள் மறைவு வெறும் சம்பவமல்ல
காலத்தால் அழியாத சரித்திரச் செய்தி
மாமி என்றழைத்தே மரியாதை செய்வாயே
மாமி துடிக்கின்றேன் உன் உருவம் காணாமல்
குறிக்கோளுடன் வாழ்ந்தே
மேற்கோளானவனே
மறுப்பெடுத்தே மீண்டு வந்தே
மருமகனாக என்றும் பிறக்க வேண்டும்
உன் ஆத்மா சாந்தி பெறவே
உணர்வுகளால் துதிக்கின்றேன்

அன்பு மாமி
திருமதி. செல்வதியம்மா
சத்தியசீலராசா

# கையுடைந்து போனதே......

உன்னிடமே பொறுப்புத் தந்தே
ஓய்வு கொள்ள நினைத்தோமே
பாசமாய் மாமா எம்மை
ஏமாற்றிச் சென்ற நியாயமென்ன
மருமகனாய் அல்லாமல் மகனாய்த்
தினம் நினைத்திருப்பேனே
மாலை நேரம் வீடு வந்தே
பல கதைகள் பேசியதை
கையுடைந்து போனவனாய்
பரிதவித்து நிற்கின்றேனே
தீராத நோயில் ஆழ்த்தி
எமை பிரிந்து சென்ற மாயமென்ன
மீண்டும் வரவிற்காய் காத்திருப்போம்
மலர் தூவி உம் பாதம் பணிகின்றோம்

மாமாமார்கள்
மாரிமுத்து . சித்திரவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாய்ந்து போகிறோம் ....

மாமாவை நினைக்கும் வேளை
மனதை ஆற்ற முடியவில்லை
சிங்கப்பூரில் இருந்தபடியே
பேசும் போதெல்லாம்
அறிவுரைகள் கூறி பாசம் கொள்வார்
அம்மாவிற்கு நிழலாய் இருப்பதாய்
அடிக்கடி நினைத்திருப்பேன்
அவசரமாய் விரைந்து மறைந்ததென்ன
வெளிநாட்டிலிருந்தபடியே
அன்பாய் உங்களோடு கதைக்கும் போதே
மெய்மறந்து போய் பாசம் கொள்வீரே
மாமாவைத் தேடித் துடிக்கிறேன்
மீண்டு வரமாட்டாரா எனத் தவிக்கிறேன்
கண்ணைத் திறந்து இமைப்பதற்குள்
காற்றாய் விரைந்து மறைந்ததேனோ
அம்மா சொல்லக் கேட்டிருப்பேன்
ஆசை முகத்தை காண காத்திருந்தேன்
பனிப்பூக்களைச் சொரிந்தே
எந்நாளும் இறைஞ்சுகின்றோம்.

அன்பு மருமக்கள்
நி. பிரதீபன், கு. லோஜிகன்

## சோர்ந்து போனோம் .............

வாடாத உங்கள் தேகம்
வாடிப் போனதென்ன
உற்ற நண்பனாய்
உயர்வான சகோதரனாய்
பாசத்தை எடுத்துக்காட்டி
ராஜாவாய் இருந்த நீங்கள்
எமை விட்டுப் பிரிந்ததேனோ
காய்நிலமாய் நாங்கள் இங்கே
செயலற்றுக் கிடக்கின்றோம் ராஜன்
பிரச்சினைகள் வரும் போதெல்லாம்
அமைதியாய் ஆறுதல் உரைப்பாயே
ஓடியோடித் திரிந்த உருவம் போல
புதைகுழியில் முடங்கிப் போனதென்ன
காத்திருப்போம் காலம் மாறிவந்தே
மீண்டும் குடும்பத்தில் பிறப்பாயென்று

அன்பு மச்சான்மார்
ரூபன், ராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் வரும் நாளில் ..................

வில்லுக் குளத்திலே இறங்கியே
நீர் விளையாடி மகிழ்ந்திருப்போம்
பள்ளியிலே தோழர்களாய் நிதம்
பாங்குடனே பவனிவருவோமே
காளிகோவில் திருவிழா வந்தாலே
உள்ளத்தால் குதூகலித்து மகிழ்ந்திருப்போம்
நினைவுகளை மீட்கின்றோம்

நீயுமில்லை எங்கள் நிலமுமில்லையே
ஐந்து மைல் சைக்கிள் பயணமாய்
மூதூாிலிருந்து சம்பூர் செல்வோம்
மாலையிலே விளையாடி
கடற்கரையில் நீச்சலடிப்போம்
நண்பர்கள் நாமெல்லாம்
திருமலையில் வந்தே சேர்ந்துநின்றோம்
காலன் விரைந்தோடி வந்தே
காவிய நாயகனாய்ப் பறித்தெடுத்தான்
நண்பனே உன்னிடம் வெற்றிடமே
நினைவுகள் வரும் நாளில் மீட்டிடுவோம்
நீயும் வரும் நாளைப் பார்த்திருப்போம்

சம்பூர் நண்பர்கள்

**கவிதையாக்கம்**
**கவிஞர். க. யோகானந்தன்**
**அதிபர்**
**தி/ சாம்பல் தீவு த. ம. வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத ரணங்களாய் ..................

வாசலிலே நின்றபடியே
வருவோர் போவோர் பார்த்து
புன்னகை செய்து நிற்பாயே
அயலவரோடு இணைந்து நின்றே
அரும்பணிகள் புரிவாயே
மனைவியோடு சேர்ந்தபடியே
குதூகலமாய் நடந்து செல்வாயே
குறும்பாக விடையளித்தே
சிரிக்க வைத்து ரசிப்பாயே
வாசலெல்லாம் அழுது நிற்கிறதே
வரவு காணாமல் துடிக்கிறதே
பாசமாய் எவருடனும் பழகிநிதம்
ஆதரவு காட்டி மகிழ்ந்து போவாயே
ஆறாத ரணங்களாய் உன் மரணம்
ஆட்டி படைத்தே அழிகின்றதே
மாறாத துயரம் தந்தே
மாநிலத்தில் மறைந்ததேனோ

உற்றார் , உறவினர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறவோம் பெரியப்பா .............

அன்பு காட்டி எமையணைத்த பெரியப்பா
இவ்வுலகு விட்டு மறைந்து போனதெங்கே
பெயர் சொல்லி அழைக்கும் போதெல்லாம்
பெருமை கொண்டு நின்றோமே
எமை மறந்து பெரியப்பா எங்கு சென்றீர்
பிஞ்சுகள் தினம் தினமாய்த் தேடுகின்றோம்
விழி மூடி துயில் கொண்டது முறையோ
மாலை நேரம் தேடி வந்தே எமைத்தூக்கி
ஆசை முத்தம் தருவாயே பெரியப்பா
பனிமலர்கள் கொண்டு தொழுகின்றோம்
பனி படர்ந்த நாட்டில் இருந்தபடியே
புதை குழியில் தூங்கும் போது சுமையிலையோ
அஞ்சுகின்றோம் பெரியப்பா தினந்தோறும்
பெரியம்மாவிடம் கேட்டு அலைகின்றோம்

பெறாமக்கள்

ஜெ. சரண்யா
ஜெ. மதன்யா
ஜெ. சிவஹர்சன்
யோ. அக்ஸயா
யோ. அபிஹேக்


ஜெ. மதுயாசனன்
ஜெ. மிதுர்ஹிதா
சா. சந்தோஷ்
சா. சஞ்ஜித்


ஜெ. டனுஹிதா
சா. சுகந்தி
சு. பிரதீசா

கவிதையாக்கம்
கவிஞர் க. யோகனந்தன்
( அதிபர் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புனித பிரான்சிஸ் சவேரியார் பாடசாலையின் 2007ம் ஆண்டிற்கான பரிசளிப்பு வைபவத்தின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடிப்புள்ள ஒரு கல்வி நிர்வாகி

23.06.2008 இல் கல்முனையில் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த வேளையில்தான் காளிராசா இறந்து விட்டார் என்ற துயரமான செய்தி எனக்குக் கிட்டியது. அந்தச் செய்தியினால் நான் மிகவும் அதிர்ச்சியடைந்து விட்டேன். நான் மாத்திரமல்ல, எவருமே எதிர்பார்த்திராத ஒரு அதிர்ச்சியான செய்தியாக இது அமைந்து விட்டது. எனது உத்தியோபூர்வ கடமைகளை நிறுத்திக் கொண்டு மிகுந்த வேதனையுடன் திருகோணமலை திரும்பினேன்.

இவரது திடீர் மறைவும், அதற்கான சூழ்நிலையும் கல்வி உலகம் வெட்கப்பட வேண்டியதான ஒரு நிலையை ஏற்படுத்தி விட்டது. சவால்களை எதிர்கொள்ளக் கூடிய, சுமைகளைத் தாங்கக் கூடிய ஒரு திறமை மிக்க கல்வி நிர்வாகியாக அமரர் காளிராசா அவர்கள் காணப்பட்டார்கள். இன்னும் 15 ஆண்டுகள் கல்விச் சேவையில் நின்று நிலைத்திருக்கக் கூடிய வல்லமை மிக்க அதிபர் ஒருவரை நாம் இழந்து விட்டோம் என்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

அமரர் திரு. சி. காளிராசா அவர்களிடம் அண்மைக் காலமாக ஏற்பட்டு வந்த ஆளுமை மாற்றங்களை நான் அவதானித்திருக்கிறேன். ஒரு நல்ல கல்வி நிருவாகியாக தன்னை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்ற உந்துதல் கொண்டவராக அவர் காணப்பட்டார். உயர் கல்வியில் நாட்டம் கொண்டவராக திறந்த பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் கல்வி தொடர்பான முதுமாணிப் பட்டப்படிப்பையும் மேற்கொண்டிருந்தார்.

ஆனால் அவரது நல்ல எண்ணங்களும், உந்துதல்களும் நிறைவேறாமல் கருகிப் போனதை எண்ணும் போது கவலை கொள்ளாமல் இருக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தி/ பாலம் போட்டாறு சித்தி விநாயக வித்தியாலய வளாகத்தினுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் காளிராசா அவர்கள் ஜனரஞ்சகமான ஒரு மனிதர். நண்பர்கள், அயலவர்களுடன் மிகுந்த அன்போடு பழகக் கூடியவர். தேவையறிந்து உதவி செய்யக்கூடிய நல்ல மனப்பான்மை கொண்டவர். எந்த விதமான நெருக்கடிகளின் போதும் தனது நண்பர்களையும், அயலவர்களையும் கலகலப்பாக வைத்துக் கொள்ளும் சாமர்த்தியம் படைத்தவர், கவலைகளையும், சூழல் நெருக்கடிகளையும் தள்ளி வைத்துவிட்டு மற்றவர்களின் மனப்பாரங்களை குறைத்து, சூழலை கலகலப்பாக்கும் சாமர்த்தியம் எல்லோருக்கும் வாய்ப்பது இல்லை. அந்த வகையில் அயலவர்களாலும் நண்பர்களாலும், கவரப்படும் ஒரு நல்ல மனிதராக காளிராசா அவர்கள் திகழ்ந்தார்.

இத்தகைய நல்ல சமூகப்பண்புகளைக் கொண்ட இளம் கல்வி நிருவாகி ஒருவரின் திடீர் மறைவு அவரது குடும்பத்தாருக்கு மாத்திரமல்லாமல் கல்வி உலகிற்கும், சமூகத்திற்குமே இழப்பாக அமைந்து விட்டது. அவரது இழப்பால் வருந்துகின்ற அவரது மனைவி பிள்ளைகளுடனும், குடும்பத்தாருடனும் எமது துயரங்களை பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

அமரர். சி. காளிராசா அவர்களது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன்.

**சி. தண்டாயுதபாணி**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**

**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**கிழக்கு மாகாணம்**
**திருகோணமலை**
15.07.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் கண்ட நண்பனாகிய சி. காளிராசா

வாழ்வு என்பது பிறப்பதற்கும் இறப்பதற்கும் இடைப்பட்ட காலமாகும். இக்காலத்திலேதான் காளி ராசாவை நான் முதலில் சந்திக்கிறேன். த/ஸாகிராக் கல்லூரியில் சக ஆசிரியராக அதே காலப்பகுதியில் நவரெட்ணம் அதிபருடன் ஒக்ஸ்போட் ரியூட்டரியில் தானும் பிரத்தியேக கல்வி வழங்கியதுடன் என்னையும் அதிலே இணைத்தவரும் அவர்தான்.

இருவரும் நண்பர்கள் என்பதனால் சகல இன்ப துன்பங்களிலும் பரஸ்பரம் பங்கெடுத்துக் கொள்வதுடன் எனது கருத்துக்கு அவர் செவி சாய்ப்பவராகவும் அவரது கருத்துக்கு நான் மதிப்பளிப்பவனாகவும் அன்று தொடக்கம் 22/6/2008 வரை இருந்தமை மறக்கமுடியவில்லை.

இதற்கிடையில் எத்தனை சந்தோஷம் எத்தனை தடங்கல்கள் இருவரும் இணைந்தால் எல்லாம் வெற்றிதான். இதுதான் வரலாறு நானும் அவரும் 1999இல் மீண்டும் ஒரே பாடசாலையான தி/உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் இணைகிறோம். இங்கு பணிபுரியும் காலகட்டத்தில் தான் எனக்கு பதவியுயர்வு கிடைக்கின்ற அதேவேளை எனது ஆலோசனையையும் பெற்று தி/பாலம்போட்டாறு சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் அதிபருக்குரிய பதவியை ஏற்று நடாத்தியும் வந்தார்.

நான் அதிகளவில் நேசித்த இரண்டு நண்பர்களில் ஒருவர் முன்னமே காலமாகிவிட்டார். (அமரர். சி. இராஜலிங்கம்) இன்று என்னுடன் இவரும் இல்லை. இவரது மரணத்தை தொலை பேசியினூடு ஒரு தடவையில் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மூன்றாவது தடவைதான் இறுதித் தீர்மானத்திற்கு வரமுடிந்தது.

"உயிர் கொடுப்பான் தோழன்" என்ற உண்மையினை இவரிடத்திலே தான் நான் காண்கிறேன். இவரது அறிவும் ஆற்றலும் பெருகிக் கொண்ட சந்தர்ப்பங்களை அண்மைக் காலங்களிலே கண்டிருக்கிறேன். நம்பிக்கைக்குத் துரோகம் செய்வதென்பது அவருக்குத் தெரியாத ஒன்று எதற்குமே நேரடியாக முகம் கொடுப்பதற்குத் தன்னையே தயார்படுத்திக் கொள்ளக்கூடிய ஒருவர். அன்னாரது பிரிவு என்னையும் எனது குடும்பத்தினரையும் மிகுந்த வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

அன்னாரது ஆத்மசாந்திக்காகவும் அவரது மனைவி. பிள்ளைகள், சகோதரர்கள். உற்றார். உறவினர் அனைவர்க்கும் அன்னாரது இழப்பிலிருந்தும் மீண்டு வருவதற்கான சக்தியை இறைவன் வழங்கவேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**நண்பன். என். விஜேந்திரன்**

**பிரதிக்கல்விப் பணிப்பாளர் (வலயக் கல்வி அலுவலகம்)**

**உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி**

**(தற்காலிக அதிபர்) திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வடக்கு கிழக்கு மாகாண
கல்வி திணைக்கள
ஊழியர் நலன்புரி
கூட்டுறவு சங்க
அங்கத்தவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

ந. பார்த்தீபன், விரிவுரையாளர், வ.தே. க. கல்லூரி

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டு ஆவணி மாதம் எமது முதல் சந்திப்பு. சிரேஷ்ட மாணவர்களின் அன்புத்தொல்லைக்கு (பல்கலைக்கழகத்தில் அது பகிடிவதை) உட்படுத்தப்பட்டு ஓர் அறையில் ஒன்றிணைக்கப்பட்டோம். அப்போது முன்பின் தெரியாத நிலை.

"தேரான் தெளிவும் தெளிந்தார் கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

என்பதன் அர்த்தம் தெரியாமலே இணைந்தோம். தேர்ந்து, தெளிவு கொண்ட நட்பல்ல......... ஆனால் நட்பானபின் இதுவும் முற்பிறப்புத் தொடர்போ என்று எண்ணுமளவிற்கு உறவானோம். ராஜன் உன்னை உடலால் மட்டும் இழந்து விட்டேன் உள்ளத்தால் உன்னை இழக்க முடியாது. அப்படி நீ பழகினாயடா.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

இது ஒருவருடன் நட்புக் கொள்வதற்குத் தேச ஒற்றுமையும் பழக்கமும் வேண்டாம். இருவர் மனம் ஒத்த உணர்சியே நட்பு என்ற உரிமையைக் கொடுக்குமாம் என்பதற்கமைய பல்கலைக்கழக மாணவர்களாய் இணைந்தோம். இன்று வரை உன்னை இழக்கும் வரை தொடர்ந்ததே எங்கள் நட்பு. இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று என்னையே நான் கேட்பதுண்டு. அது உன்னுடைய பழகும் பண்புதானடா. எதிர் பார்ப்புகளற்ற விட்டுக்கொடுப்பாளன் நீ.

இன்று வரை நான் சந்திக்கும் அனைவர்க்கும், என் அனைத்து மாணவர்களுக்கும் எங்கள் நட்பைப் பற்றி நான் பெருமையாகக் குறிப்பிடுவதுண்டு. என் மனம் நோக நீ...... ஏன் யார் மனம் நோக நீ நடந்தவன் அல்ல...... உன் நகைச்சுவைப் பேச்சும், நளினமான தோற்றமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை வைக்கச் செய்யும் உன் நடத்தையும், எல்லோர்க்கும் உதவிடும் உளமும் யாரையும் உன் மேல் ஈடுபாடுகொள்ள வைக்கும். உனக்கா இந்த கதி!

ராஜன் கூடா நட்பால் குலைந்து போனதடா உன் வாழ்வு. குணத்தையும் செய்கையையும் ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவன் சாவதற்கு காரணமான துன்பத்தை தானே உண்டாக்கி கொள்வான் என்ற கருத்துக்கேற்ப ஆராயாமல்....... அன்பினால் மட்டும் அளந்து நட்புக் கொண்டதனால் உன்னை இழந்து நிற்கும் உறவுகளுள் நானும் ஒருவனடா ராஜன். பகைவனையும் அறிவினால் வெல்லக் கூடிய ஆற்றல் கொண்டிருந்தும் அன்பினால் தோற்றுவிட்டாயடா ராஜன். கூடா நட்புக்குப் பலியாகி.......... உதாரண புருஷனாகி விட்டாய்.

சர்வாதிகாரியாய், சுய நலமியாய், கபடதாரியாய்....... எழுபத்தெட்டு ஆசிரியர்களையும் கல்வித் திணைக்களத்தின் ஒரு சில 'எலும்புத் துண்டுக்கு ஒத்துப் போகும் விஷமிகளுக்கும்' உத்தமனான நீ பலியாடாய் போனது தான் நினைக்க வேதனையாய் இருக்குதடா. தீராத சோகமாயிருக்குதடா ராஜன்.

மனித நேயமற்ற, வெறும் புத்தகப் பூச்சிகளை, கடதாசித் தராதரங்களை மட்டுமே தேடிக் கொண்டிருக்கும் எங்கள் கல்வி உலகில் நீ வாழத் தெரியாதவனாய் போனாயடா ராஜன் வதை முகாமுக்குப் போனாயடா.

பல காய் பிடித்து தன் வளம் பெருக்கிக் கொள்ளும் இன்றைய சமூக அமைப்பில் சில புல்லுருவிகளை உன் சிறப்பு - உன் இழப்பு வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது. கூடியிருந்தே குழி பறிக்கும் கூட்டத்தினரின் முகத்திரை உன்னால் கிழிக்கப்பட்டுள்ளது. காட்டுமிராண்டிகள் காட்சிப்படுத்தியாச்சு.

பத்திரிகைகளில் உன் இறப்புத் தொடர்பான செய்திகளைப் படித்த எங்கள் பச்சோந்தி ஆசிரிய சமூகம் புதிய பாடம் படித்துள்ளனர். உன் சிறப்புத்தான் பலரது கண்களை திறக்கச் செய்துள்ளதடா ராஜன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன், நீ ஒரு போராளிதான். காலம் உனக்கொரு பாட்டெழுதும் என்பதுதான் இன்றைய யதார்த்தம். உனது மரணம் எப்படி வந்திருப்பினும் அது எல்லோருக்கும் ஆற்ற முடியாத சோகம் தான். ஆயினும்........ தொடர்ந்து கொண்டிருந்த பெரும் அநியாயத்துக்கு நீ ஆகுதியானபோது புது விடியலை நீ தந்துள்ளாயடா. நீ ஒரு போராளிதான்.

உன் சேவை தேவை. உன்னோடு இணைந்தவர்களுக்கும் உன் உதிரத்தில் உருவாகியவர்களுக்கும், உடன் பிறப்புகளுக்கும், உறவுகளுக்கும், சுற்றத்தார்க்கும், நண்பர்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்புத்தான். எப்போதும் யாருக்கும் நீ செய்த உதவிகள் உன் உயர்வான குணத்தையும் பண்புகளையும் பறைசாற்றும். உன் இறுதிப் போராட்டமும் அனைவர்க்கும் பெரும் உதவிதான். இல்லையெனில் இந்த அராஜகம் இன்னும் எத்தனை காலம் தொடர்ந்திருக்குமோ. இந்த அநியாயத்தில் உன் பெயரும் அழிந்திருக்கும்.

ராஜன், நீ பிரதி அதிபராய் வந்து விட்டால்........ ஒரு பாடசாலையில் தான் நடாத்திய சர்வாதிகார தர்பாரும், தான் உழைக்கும் உபரி வருமானங்களும், உருளித் தனங்களும், யார் யாரை எல்லாம் தன் அதிகார/ இலஞ்ச / ஊழல் வலைகளில் வீழ்த்தி நடாத்திய கபடங்களும் வெளிப்பட்டு விடுமோ என்று நினைத்த மனிதாபிமானமற்ற சூத்திரதாரி எப்படியெல்லாம் மட்டமாகத் திட்டமிட்டு, நல்வழி காட்ட வேண்டிய் மாணவர்களையும் பிழையான வழிக்கு திருப்பி, அவர்களுக்குப் பாதை காட்டவேண்டிய ஆசிரியர்களையும் தவறாக வழி நடாத்தி உன்னைச் சித்திரவதை செய்யுமளிற்கு செயல்பட்டிருக்கிறான் என்றால்........... ராஜன் நீ பிரதி அதிபராய் அந்த மனித நேயமற்றவனோடு சேர்ந்து அவப்பெயருக்கு ஆளாகியிருப்பாய்.

அந்த அநியாயக்காரனுடைய முறையற்ற செயல்களுக்கெல்லாம் அதை எதிர்க்க முடியாத, அந்தளவிற்கு நீ நம்பிக்கை வைத்த உன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையோ அல்லது கீழ்ப்படிவோ உன்னையும் பழி சுமக்கச் செய்திருக்கும் என்றே நான் நினைக்கிறேன். இதுவரை செய்த அநியாயங்களெல்லாம் உன் பெயரில் பதிவு செய்யப்பட்டும் இருக்கும். அதிலிருந்து நீ தப்பி விட்டாய். உன் இழப்பிலும் நான் ஆறுதலடையும் விடயம் அதுதானடா.

தாகத்திற்கு தண்ணீர் கொடுக்காத பாவிகளாய், ஆபத்துக்கு உதவாது அதிபருக்குப் பயந்து ஆசிரியர்களாக உலவித்திரியும் நடைப்பிணங்களாய் அதிபரின் ஆசைகளுக்காக மாணவர்களைப் பிழையாய் வழிநடத்தி முண்டங்களாய்த் திரிந்த மாணவ தலைவர்களாய்..... அந்த செம்மறியாட்டுக் கூட்டத்திற்குள் ராஜன் நீ போகாமல் தப்புவதற்கு உன் மரணம்தான் நல்ல தீர்வென்றால் அது இழப்பல்ல என்றுதான் நான் உணர்கிறேன்.

ராஜன், நான் உன்னிடம் கற்றவை பல. விடாமுயற்சி, தன்னம்பிக்கை, உறவுகளை மேம்படுத்தும் மனப்பாங்கு, தோல்வியைக் கண்டு துவழாத துணிச்சல் எத்தனையோ சொல்லலாம். உனக்கேற்பட்ட பல தோல்விகளின் போது உன்னை இழக்காத நீ, இன்று உயிரிழந்து போனாய் என்றால் உன் தவறான நம்பிக்கை, தேவையற்ற நட்பு, போலிகளைப் புரிந்து கொள்ளாத அப்பாவித்தனம் போன்றவைதான் காரணமடா. இதுவும் பலருக்குப் படிப்பினைதானடா. சேரிடம் அறிந்து சேர் என்பதை நீ உணரவைத்துள்ளாய். என்ன, அதற்காக உன்னை பணயக் கேடயமாக்கிவிட்டாய். பலரைத் துன்பத்திலாழ்த்தி விட்டாய்.

யூன் 23 பிற்பகல் 2.00 மணிக்கு ஓர் அதிர்ச்சி செய்தி கிடைத்தது. அந்நிமிடம் என் இரத்தோட்டம் நின்றது போல் உணர்வு தலையில் இடி விழுந்தது போல் பிரம்மை. பூமி தலை கீழாகச் சுற்றியது போல் நினைவு அந்நாளை நினைக்கவும் முடியவில்லை. மறக்கவும் முடியவில்லை. என் உடன் பிறவாச் சகோதரரின் அவலச் செய்தியை கேட்ட சூனிய நாள்.

என் காதுகளை நம்ப முடியாமல் ஒரு முறை அல்ல இரு முறை தொலைபேசியில் கேட்டேன். அச்செய்தி பொய்யாகி விடாதா என்ற ஆசையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26 வருடங்கள் பழகிய பழக்கம். அன்று தொடக்கம் இன்று வரை ஒரே மாதிரியான பாசம், நட்பு உதவி செய்வதற்கு என்றே பிறந்தவனா? என்று கேட்டுவிடுமளவிற்கு உதவி செய்யும் மனமும் பழக்கமும் எந்த தலைபோகிற விடயத்தையும் சமாளிக்கும் சாதுர்யம் ஆனால் நண்பனாக வந்த காலனை உன்னால் எதிர்க்க முடியவில்லையா?

நீ எந்தச் சந்தர்ப்பத்திலும் சோர மாட்டாயே? உன்னிடம் வந்த காலன் உன்னை, உன் துணிவை எல்லாம் அவன் வென்று விட்டான். உன் சிரிப்பை, உன் அழகை, நட்பின் வலிமையை அவன் பார்த்துவிட்டு பாசக் கயிற்றை வீசாமல் விட்டிருக்கலாமே? அவன் கூட ஏமாற்றி விட்டான்.

எப்போது உனது வீட்டிற்கு வந்தாலும் உன்னிடம் இருந்தால் என்ன இல்லை என்றால் என்ன அதே புன்னகை அதே வரவேற்பு காபன் போல் ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் கூறுவாய். இனி எப்போது நாம் கேட்போம். இப்போதும் உன் வார்த்தைகள் எம் காதில் ஒலிக்கின்றன. உன்னை பார்க்க வந்த போது உன் திருமணக் கோலம் போல் காட்சியளித்ததை எப்படி மறப்பது?

வாழ்ந்த வாழ்க்கை நிறைவான வாழ்க்கை அதனால் தான் இடையில் ஆயுள் முடிந்ததோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

எம்மால் மறக்க முடியாதவை பல இருக்கும் போது உனது மனைவி பிள்ளைகளால் எப்படி உன் பிரிவை தாங்குவார்கள். எந்நேரமும் தலை தலை என்று உன் மனைவியும் பிள்ளைகளும் கூறுவார்களே. இனி யாரைக் கூறுவார்கள். நீ நிறைவான வாழ்க்கையுடன் உற்ற நண்பனால் பாதி காலத்தில் நீண்ட தூரம் சென்றுவிட்டாய். இனி நீ எப்பிறப்பிலும் நண்பனை வைத்திருக்காதே. உன் பிரிவால் வாடும்

**- பார்த்தீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றவெளி நண்பர்களின்

# இதயக் குமுறல்கள்

1990ம் ஆண்டு முதல் கற்றவர்களும், அனுபவம் வாய்ந்தவர்களும், விவேகமுள்ளர்களும், விற்பன்னர்களுமாக ஏறத்தாழ 18 பேர் கொண்ட குழுவினர் திருமலை முற்றவெளியில் தினமும் மாலை 7.00 மணிமுதல் 8.00 மணிவரை சகல கவலைகளையும் மறந்து சந்தித்து கலந்துரையாடி வந்தோம்.

வயதில் மிகவும் இளமையானவர் திரு. S. காளிராஜா ஆனால் பலரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் அறிவும், ஆற்றலும், விவேகமும், வசீகரத்தோற்றமும், புன்முறுவலும், கண்களைச் சிமிட்டும் அழகும் தனியழகு கொண்ட மாவீரன் அவன்.

இரக்க சுபாவமும், நண்பர்களுக்கு உதவும் நல்ல மனமும், நண்பர்களின் நன்மை, தீமைகளில் முன்வந்து பங்களிப்புச் செய்யும் நற்பண்புகளும் ஆசிரியர் சமூகத்தின் உயர்வுக்காக மாபெரும் அர்ப்பணிப்பும் கொண்டவராக நாளாந்தம் தன்னை ஈப்பெஞ்சிக் கொண்டார். பிரச்சினைகள் ஏற்படும் வேளைகளில் நல்ல ஆலோசகராகவும் செயல்படுவார். கசங்காத உடைகளை எப்பொழுதும் கம்பீரமாய் உடுத்திருப்பார்.

மாலை வேளையில் தனது காரில் நண்பர்களையும் திண்பண்டங்களையும் தினமும் சுமந்து வருவார். வாயார வயிறு குலுங்க சிரிக்கவைக்கும் செல்லச் சீமான் அவர் அவ்வேளையில் அரசியல் நிலவரம், கல்வி உலகின் அபிவிருத்தி, பிரச்சினைகள், சமூக முன்னேற்றம், நாட்டு நடப்புகள் பற்றியெல்லாம் நண்பர்களுடன் அளவளாவுவார்.

இவ்வாறான சூழலில் அவருக்கு முன்னைய பாடசாலையில் ஏற்பட்ட சில அசாதாரண சூழல் காரணமாக தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் தற்காலிக இணைப்பு பெற்று சிறிது காலம் பணிபுரிய ஆசைப்பட்டார். அவரது ஆசை அர்த்தமற்றதாகியது. இந்தச் சூழலில் உலக சவால்களை வெல்லும் ஆற்றலை அவர் பெற்றிருந்தமையால் நிரந்தரமாகப் பிரதி அதிபர் பதவியை சட்ட பூர்வமாகப் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18/6/2008 அன்று உவர்மலை விவேகானந்தாவில் பிரதி அதிபராக கடமை ஏற்றார். 3 தினங்கள் நிம்மதியற்று, நித்திரையற்று தினமும் வேதனையுடன் காணப்பட்டார்.

இச்சூழலில் எமது குழுவினர் பலரும் பல்வேறு வழிகளில் சமூகமாகக் கடமையாற்றும் சூழலை உருவாக்க ஒரு மாத காலமாகப் பல முயற்சிகளை அயராது மேற் கொண்டோம். முயற்சிகள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகியது. ஆறாத துன்பத்தையும் மறவாத வேதனைகளையும் எம் மனதில் தோற்றுவித்துள்ளது.

காலனின் கட்டளைப்படி 23/6/2008இல் நரக வேதனையுடன் பாடசாலையை விட்டு வெளியேறி வைத்திய சேவையின் போது அன்னார் உயிரிழந்தமை எம்மை ஆழ்ந்த துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரது பிரிவை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை. சிலர் கண்ணீர் விட்டு அழுகின்றனர். சிலர் மனதுக்குள் தினம் தினம் அழுதுகொண்டே இருக்கின்றனர். சிலர் இவரது ஆத்மா சொர்க்கம் அடைய வேண்டும், இவரது பிள்ளைகள் கற்று நல்ல நிலைமை அடைந்து காளிராஜாவின் கனவை நனவாக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றனர்.

காளிராசாவுக்கு அன்பான மனைவியும், அழகான, அறிவான பிள்ளைகளும் இருப்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம். காளிராஜாவின் ஆசை நிறைவேற எமது உறுப்பினர்கள் அவரது குடும்பத்துக்கு என்றென்றும் உதவிபுரிய காத்திருக்கின்றனர்.

காலனின் கட்டளையை மாற்றும் வல்லமை எவரிடமும் இல்லை. எனவே நடந்தவை முடிந்துவிட்டன. நடக்கப் போறவை நல்லவையாக அமைய எமது பிரார்த்தனைகள் உதவும்.

முற்றவெளி நண்பர்கள்

க. அரியநாயகம்

அ. தில்லையம்பலம்

த. பாலகெங்காதரன்

ஆ. சிதம்பரநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நண்பன்

நானும் காளியும் சம்பூர் கிராமத்தில் உதயமாகி பட்டப்படிப்பு வரை ஒரு தாய் பிள்ளைகளைப் போல் ஒன்றாய் படிந்து பழகினோம். காளியும் நானும் மூதூர் மத்திய கல்லூரியில் உயர்தரம் படிக்கும் போது சம்பூரில் இருந்து மூதூருக்கு ஐந்து மைல் தூரம் கால்நடையாக வந்து மிக மிக வறுமையில் பல கஸ்ரங்களுக்கு மத்தியில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு சென்றோம். விடா முயற்சி வெற்றியளிக்கும் என்பதற்கு காளி ஒரு உதாரணம். சிறந்த பாடகன், சிறந்த பேச்சாளன், சிறந்த நகைச்சுவையாளன். நகைச்சுவையான பேச்சின் மூலம் எல்லோருடைய மனதையும் கொள்ளை கொண்டவன். இல்லற வாழ்க்கையிலும் ரஞ்சியோடு மனைவி என்ற தானத்தை விட தன் தாயினுடைய தானத்தில் வைத்து வாழ்க்கை நடத்தியவன். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். அந்தவகையில் ரஞ்சி காளிக்கு மனைவியாக கிடைத்தது உண்மையில் இறைவன் கொடுத்த வரம். தாரமென்றால் தன்னுடைய கணவனை எல்லா வழிகளிலும் முன்னுக்கு கொண்டுவர வேண்டும் என்பதற்காக இரவு பகலாக நெருப்பில் வெந்து தனக்காக உழைத்த தனது மனைவி என்பதை எனக்கு அடிக்கடி ஞாபகமூட்டுவான். காளி இல்லாத வாழ்க்கையை ரஞ்சியால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. காளி இறக்குமுன்பு அனேகருக்கு காளியினுடைய செல்வாக்கு தெரியவில்லை. காளியினுடைய இறுதி ஊர்வலம் அதை பறை கூறியது. ஜீரணிக்க முடியாத இழப்பு காளியின் இழப்பு.

நண்பன்

பேரானந்தம்

# கண்ணீர் அஞ்சலி

"காளி" என்று எம்மால் செல்லமாக அழைக்கப்படும் அந்த அற்புதமான மனிதரை சந்திக்கும் பாக்கியத்தை கொழும்பு திறந்த பல்கலைக்கழகம் எமக்குப் பெற்றுக் கொடுத்தது.

அன்பு நண்பா 'காளி' உன்னுடன் உறவாடியது ஓராண்டாயினும் நீ தந்த நினைவுகள் சுகமானவை. புன்னகை பூத்த முகமும் நகைச்சுவை உணர்வு கொண்ட உன் பேச்சும் என்றும் இதயத்தை விட்டகலாதவை நண்பா.

பல்கலையில் கற்றல் செயற்பாடுகளில் மிக ஆர்வமுடன் செயற்படும் நீ ஆலோசனைகள் பல நல்கி நல்லறிவை எம்முடன் பகிர்ந்து கொள்வாயே. சிற்றுண்டிச் சாலையில் எம் அனைவருக்கும் சிற்றுண்டி பல பகிர்ந்து மகிழ்வாயே உந்தனது பிரிவு எம்மை ஆளாத் துயரில் ஆழ்த்தியதே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருமலையில் பிரசித்த பள்ளியில் தலைமை தாங்க உன் புகழ் பரவும் என நினைத்தோமே அருமை நண்பா எம் ஆசைகள் நிராசைகளாகினவே. வகுப்பறை நீயில்லாமல், உன் நினைவுகள் முள்ளாய் குத்துகின்றதே.

உன் இழப்பு எமக்கும் உன் குடும்பத்தினருக்கும் மட்டுமல்ல நண்பா கல்விப் புலத்திற்கே ஒரு பாரிய இழப்பென்பது உண்மை நண்பா.

சோதரா..............
சோகக்கதை எமக்கு சுமையாக்கி விட்டு
சொல்லாமல் சென்றவனே...................

நண்பா.....................
பாடச்சுமைக்குள் புதைந்து புதைந்து
நாம் பரீட்சை எழுதிய நினைவுகளும்
பள்ளிப் பிள்ளைகளுக்கு
பாடம் நடத்திய
முன்னைய நாட்களும்
என்றும் எம்
இதயத்தால் வாசிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும்
நீ..........
எப்போதும் அணிந்திருக்கும்
உன் பிரத்தியேக ஆபரணம்
.................... அந்தப் புன்னகை
நினைக்கும் போதெல்லாம்
இதயம் அழுது கொள்கிறது
நண்பா.........................
அன்று
உன் இறுதிப் பயணம்
அண்மித்து விட்டதை அறியாமலே
உற்சாகமாய் படித்தோமே
இதயத்தின் அடியில்
ஆறாதிருக்கும் ரணத்தை
எம் பேனா முனையால்
கீறி விட்டுக் கொள்கிறோம்'
இதனால்
இங்கு வருவது
கவிதையல்ல ................
........... கண்ணீர்

**ஆசிரியர் கல்வியில் முதுகலை மானிப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின்**
**1ம் வருட மாணவர்கள்**
**2007 / 2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி/ பாலம்போட்டாறு சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் திரு. S. காளிராஜா அவர்கள் அதிபர் என்ற பதியுடன் 1999ல் காலடி எடுத்து வைத்தார். இவர் இங்கு வந்தபோது வயலும் வயல்சார்ந்த மருத நிலத்தில் பாலைவனம் போன்ற மெருகுடனேயே இப்பாடசாலை காணப்பட்டது. பாடசாலை வளவினைச் சுற்றி ஒரு வேலி கூடக் காணப்படவில்லை. இப்பின்தங்கிய கிராமத்தையும் படிப்பறிவு குறைந்த பாமர மக்களையும் முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் இப்பாடசாலையின் வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டினார்.

இவர் தனது அறிவாலும் ஆற்றலாலும் சிறப்புமிக்க சீரிய சிந்தனையினாலும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு மாணவர்களின் கல்வியறிவை வளர்ப்பதற்காக அரும்பாடுபட்டவர் என்றால் மிகையாகா! இப்பாடசாலையில் தரம் 6 வரை இருந்த வகுப்புக்களை தரம் 7, தரம் 8, என்றவாறு உயர்த்தி உன்னத நிலைக்குக் கொண்டு வந்தார். இதுமட்டுமன்றி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைய வேண்டும் என்ற உன்னத நோக்குடன் தனது ஆளுமையினால் ஆசிரியர்களையும் பெற்றோரையும் அணுகி அதற்கான நல்வழியமைத்துக் கொடுத்து ஊக்குவித்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பல மாணவர்களை சித்தியடைய வைத்த பெருமையும் எம் அதிபருக்கே உரியதாகும். ஆரம்பக் கல்விப் பிரிவுக்கான கண்காட்சியில் கோட்ட மட்டப் போட்டி, வலயமட்டப் போட்டி, தேசிய மட்டப் போட்டி என்பவற்றில் பங்குபற்றி தேசிய மட்டப் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றுக் கொண்ட பெருமையும் இவர் தம் சேவைக்காலத்திற்கே உரியதாகும்.

தம் மாணவர்களின் ஆற்றல்களை வளர்க்கும் பொருட்டு விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியும், தமிழ் மொழி தினபோட்டி, ஆங்கில மொழி தினப்போட்டி, சமயப்போட்டிகள், விஞ்ஞான கணித போட்டிகள் போன்றவற்றிலும் பங்கு கொள்ளச் செய்துள்ளார்.

தனது நிர்வாகத் திறமையினாலும் தனது பேச்சாற்றலினாலும் புன்னகையினாலும் அனைத்து வேலைகளையும் சுலபமாகச் செய்து முடிக்கும் ஆற்றலுடன் விளங்கினார். பாடசாலையையும் ஒரு குடும்பமாகவே கருதி ஐக்கியமாகவே செயற்பட்டார். தன் கீழ் வேலை செய்யும் ஆசிரியர்கள் ஒவ்வொருவரினதும் நிலையறிந்து அவரவர்க்கு ஏற்ற வகையில் வேலைகளைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்தளித்து மிகச் சிறப்பான முறையில் நிர்வாகம் செய்து வந்தார். மற்றவர் மனம் நோகும்படியாக ஒரு போதும் அவர் நடந்து கொண்டதில்லை.

மாணவர் நலன் கருதியும் அவர்களின் தேவைகருதியும் ஒரு கட்டிடம் போதாது என்று இன்னுமொரு புதிய கட்டிடத்தையும் பெற்றுக் கொடுத்தார். சிறுவர்களுக்கான விளையாட்டு முற்றம், விளையாட்டு மைதானம், மலசலகூட வசதி, பாடசாலை வளவைச் சுற்றி வேலி அமைத்தல், கிணறு, குழாய் நீர் வசதி, மின்சார வசதி என்பவற்றையும் தனது இச்சேவைக்காலத்திலேயே பெற்றுத் தந்து இப்பாடசாலையை ஒரு சோலையாக மாற்றிய பெருமைக்குரியவராவார். இது மட்டுமன்றி எமது பாடசாலைக்கு 2 கம்பியூட்டர்களையும் பெற்றுக் கொடுத்துள்ளார். நகரப்புறபாடசாலைகளில் எமது மாணவர்கள் சிலர் கற்பதற்கான வசதி வாய்ப்புக்களையும் பெற்றுத் தந்ததுடன் பெற்றோரை இழந்த மாணவர்கள் தங்குமிட வசதியுடன் கற்பதற்கான வழியையும் அமைத்துக் கொடுத்துள்ளார்.

எம் அதிபர் இக்கிராமத்திற்கும் இப்பாடசாலைக்கும் செய்த சேவையை அளவிட முடியாது. மக்களுக்கு நல்வழிகாட்டியாகவும் நல்லாலோசகராகவும் விளங்கியுள்ளார் என்பதனை அவர் தம் மறைவின் போது எம்மால் உணர முடிந்தது. அனைத்துப் பெற்றோர் மாணவர்கள் கண்களிலும் இருந்து வழிந்த கண்ணீரும் உள்ளக் குமுறல்களையும் நாம் எம் கண்களால் கண்டு கொண்டோம். உணர்ந்து கொண்டோம். மறைந்தும் மறையாப் புகழ் பெற்றுவிட்டார்.

எம் அதிபர் எல்லோர் மனதையும் தொட்டு விட்டார். எம் அதிபர் உம் உயிர் பிரிந்தாலும் உம் உடல் அழிந்தாலும் உம் சேவை மறைந்தாலும் நீர் காட்டிய வழி நின்று எம் சேவை தொடருவோம்.

அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நன்றி

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னையும் மறப்பதுண்டோ !

நட்புக்கு இலக்கணமாய் உருவெடுத்த உத்தமன் காளிராஜா. இவன் தொடர்பு பேராதனை தும்பறை வளாகத்தில் 1982ல் ஏற்பட்டது. அந்த நாள் நினைவுகளை மீட்டுப்பார்க்கிறேன். கட்டுகஸ்தோட்டை டீன் அன்ரியின் வீடு எங்களுக்கு சொர்க்காபுரியானது. உடன் பார்த்தீபன், பேரானந்தம், கரி, ரவி, பளீல், எனும் ஆறுபேர். ஆரம்பத்தில் அன்ரி தந்த உணவு வயிற்றுக்குப் பத்தவில்லை. இதை உணர்ந்த காளி அன்ரியுடன் வழக்காடி வயிற்றை நிரப்பினார். இதை என்றுதான் மறப்பது.

பல்கலைக்கழகம் பகிடி வதை என்றால் காளி ராஜாவின் ஞாபகம் தான் வரும். இவன் வார்த்தைகள் எப்போதும் கிரணம் பொருற்படவே அமையும். நக்கல் அடிப்பதில் அவனுக்கு ஈடு அவனே. விறுவிறுப்பான பேச்சு, வசீகரமான தோற்றம் யாரையும் கொள்ளை கொள்ளும் மனம்.

காளி சிறந்த பாடகன். தனது பாட்டுத்திறத்தாலே ('வசந்தம் பாடிவர வைகையோடிவர..........") சிரேஷ்ட மாணவர்கள் அடங்கிப் போனார்கள். பாடலில் தனிக்காட்டு ராஜாவாக மிளிர்ந்தான். சிறந்த பேச்சாளனாக காணப்பட்டான். நியாயம் எனக் கொண்டதை எந்தச் சந்தர்ப்பத்திலும் யாருக்காகவும் விட்டுவிட மாட்டான். படிப்பிலே மிகவும் கெட்டித்தனமானவனாக காணப்பட்டான். காலங்கள் ஓடின. 1983ம் யூலைக் கலவரம் வந்தது. நாங்கள் யாழ்ப்பாணம் சென்றோம். அங்கு பார்த்தீபன், கரிகரன், ரவி வீட்டில் ஒரு வாரம் தங்கினோம். அங்கும் எங்கள் இன்ப நினைவுகள் நிலைத்தன. 83 யூலைக் கலவரத்தின் பின் ஒருவாறு எங்கள் படிப்பு தொடர்ந்தது. அனைவருக்கும் பேராதனை பல்கலைக்கழக மார்க்கஸ் பெர்ணாண்டோ விடுதியே எமக்கு அடைக்கலமளித்தது. இவ்வேளையில் தான் காளிராஜாவின் துணைவி (ரஞ்சியின்) தொடர்பு ஏற்பட்டது. கூடவே ரஞ்சியின் தமயன் "ரூபன்" காளிராசாவிற்கு காவலனான காரணம் அவ்வளவு அட்ரூழியம். இது எங்கள் பல்கலைக்கழக அனுபவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிராசாவின் துணை வாழ்க்கை பற்றி சந்திப்பதும், பழகுவதும் அதன் மூலம் நாங்களும் சந்தம் பற்றி அறிய முடிந்தது. "தாரமும் குருவும் தலைவிதி என்பார்கள்" இது காளி, ரஞ்சிதம் விடயத்தில் சாலப் பொருந்தும். அன்று சிறு பிள்ளைத் தனமாக காணப்பட்ட ரஞ்சிதத்திற்கு காளி பொருத்தமான ஆண்மகனாக காணப்பட்டான். காளி அன்றில் பறவை என வாழ்ந்தார்கள். புகழ்பாட இரண்டு புத்திரர்கள். "நாமிருவர் நமக்கிருவர்" என்ற தாரக மந்திரத்தைப் போல் போற்றி வாழ்ந்தார்கள். பொன் பொருள் வாழ்க்கைக்கு தேவை என உணர்ந்த இவர்கள் உழைப்பாலும் உயர்ந்து நின்றனர். அடிக்கடி என்னுடன் தொலைபேசியில் உரையாடுவார். தனது பிள்ளைகளின் படிப்பில் மிகவும் கண்ணியமானவன் மகனின் பாதுகாப்பைபற்றியே அதிகம் பேசுவார்.

காளிராஜ் சிறந்த பரோபகாரி எதையும் எதிர்பார்க்காது உதவி செய்யும் செயல் வீரன். நான் மட்டுமன்றி என்னால் அனுப்பப்பட்ட அனேகப் பேருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வழியனுப்புபவர். இதற்கு ஏற்றாற் போல் மனைவி அமைந்துவிட்டது. ஏனோ இவர்கள் வாழ்க்கை மேல் கொண்ட பொறாமையால்தான் கூற்றுவன் பறித்தானோ உயிரை. காளிராஜா இறந்தான் என்னும் வார்த்தை என் காதில் அனல்பிளம்பாய் புகுந்து உறுத்துகின்றது உள்ளதத்தை, அவன் இறக்கவில்லை தன் பிள்ளைகளில் நின்று இயங்குவான் என நம்புகின்றேன்.

காளிராஜா எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் அழியாச் சொர்க்கம் அனுபவிப்பார் என்றும் அவரைப்பிரிந்து வாழும் மனைவி மக்கள் உறவினர்கள் அனைவருக்கும் இந்த பேர் இழப்பை தாங்கும் வல்லமையை இறைவன் கொடுக்க வேண்டும் எனப்பிரார்த்திக்கின்றேன்.

*ஆருயிர் நண்பன்*
*க. நல்லரெத்தினம்*
*களுதாவளை - 1*
*மட்டக்களப்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ளம் கொண்ட அயலன்

ஒரு கணம் உலகமே நின்று விட்டது போன்ற அதிர்ச்சியில் உறைய வைத்தது உங்கள் மறைவுச் செய்தி. நீதி, நியாயமற்ற இந்த உலகை விட்டு நீங்க வேண்டும் என்பதற்காகவா எம்மையெல்லாம் விட்டு விரைந்து சென்று விட்டீர்கள்.

45 வருடங்கள்தான் வாழ்ந்தீர்கள் என்றாலும் உங்கள் வாழ்வை உலகம் என்றும் சொல்லும் கண்ணீரிலும், கவலையிலும் கூட ஒரு மகிழ்ச்சி கொண்ட சிரிப்பு உங்களிடம் இருக்கும். ஆனால் உங்கள் பிரிவு எங்களுக்கு தந்த பரிசு கண்ணீரும் கவலையும்தான்.

மற்றவர் மனதைக் கவரும் வசீகரமான பேச்சும், புன்னகை ததும்பும் முகமும், கணப்பொழுதில் சிமிட்டுகின்ற கண் அசைவும், கம்பீர நடையும் எங்களால் மறக்க முடியாத உங்களது அடையாளங்கள் உங்களது நகைப்பு பேச்சுக்கள் மனக்கவலை தீர்க்கும் மருந்து.

உழைப்பின் மூலம் உயர்வு அடைவீர்கள். உங்கள் அர்ப்பணிப்பும், விடா முயற்சியுமே உங்கள் வாழ்க்கையின் வெற்றிக்கான அச்சாணியாக அமைந்தது. உங்கள் சிறந்த தலைமைத்துவம் உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தும் என்று நாம் நினைத்திருந்தோம். ஆனால் காலன் விரைவாகவே உங்களைக் கொண்டு சென்று விட்டான்.

எங்கள் எதிர்வீட்டு அயலவர்களாக இருந்தீர்கள். எங்களுடன் மிக அந்நியோன்யத்துடன் பழகும் ஒரு குடும்பத்தின் தலைவனாக இருந்தீர்கள். எமது அயலுக்கு தைரியத்தை தந்தவராக விளங்கினீர்கள். உங்கள் இழப்பை ஈடு செய்ய முடியாது. ஆயினும் உங்கள் குடும்பத்தினருக்கு உதவிக்கரமாய் இருந்து ஆறுதல் கொடுப்போம் என்பதைத் தவிர வேறென்னதான் சொல்ல முடியும்?

உங்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்

மேகலா தண்டாயுதபாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் மரணமாகிப் போன

# புனித ஆசிரியத் தொழில்?

திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில் பிரதி அதிபருக்கு எதிராக சில ஆசிரியர்களும் மாணவர்களும் நடாத்திய ஆர்ப்பாட்டம் காரணமாக அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார் என்ற செய்தி இலங்கை கல்வி வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

மரணமான அதிபர் மேற்படி கல்லூரியில் சாதாரண ஆசிரியராக கடமையாற்றி பதவி உயர்வு பெற்று வேறு பாடசாலைக்கு அதிபராக சென்றவரென்றும் பின்னர் தான் கற்பித்த பழைய பாடசாலையான உவர்மலை விவேகானந்தாவுக்கு பிரதி அதிபராக மாற்றலாகி வந்தவரென்றும் தெரிய வருகிறது.

இவரது வருகையை சேவை நீடிப்பு பெற்று தற்போது இக்கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றுபவர் விரும்பாததால் மாணவரை தூண்டி விட்டு குழப்பத்துக்கு காரணமாக இருந்துள்ளாரென தகவல்கள் தெரிவிக்கின்றன. அது உண்மையானால் தொழில் போட்டி, பொறாமை காரணமாக அநியாயமாக ஒரு உயிர் இழக்கப்பட்டிருக்கிறது என்பதே யதார்த்தமாகும்.

தான் சாதாரண ஆசிரியராக கடமையாற்றிய பாடசாலைக்கு பிரதி அதிபராக செல்லும் ஒருவர் அப்பாடசாலை மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் சிறந்த ஒரு வரவேற்பை எதிர்பார்த்தே சென்றிருப்பார். அவரது எதிர்பார்ப்பில் தவறும் இல்லை. அத்துடன் பாடசாலை நிர்வாகம் கூட அவரது வருகையை இரு கரங்கொண்டு வரவேற்றிருக்க வேண்டும். ஆனால் அதற்கு நேர்மாறான சம்பவங்கள் இடம் பெற்றதனால் பாவம் அந்த அப்பாவி ஆசிரியர் (உப அதிபர்) உயிரிழக்க வேண்டியேற்பட்டுள்ளது.

மாரடைப்பு ஏற்பட்ட உப அதிபர் தண்ணீருக்காக எவ்வளவோ மன்றாடியும் ஒரு சொட்டு தண்ணீராவது கொடுக்க முடியாதளவுக்கு கடவுளுக்கு இணையான ஆசிரிய பெருந்தகைகளினது வெள்ளை மனம் கொண்ட, பிஞ்சு உள்ளங்களைக் கொண்ட மாணவ மணிகளினதும் மனங்கள் இரும்பாகிப் போனதுதான் துரதிர்ஷ்டசமானதாகும்.

மரணமான உப அதிபரே தனது வீட்டுக்கு தொலைபேசி மூலம் தகவல் தந்து அவர்கள் வந்து தடைகளை தகர்த்து அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றுள்ளனர். ஆனால் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல் முன்னரே அவரது உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்துவிட்டது. தமது சக ஆசிரியர் மாரடைப்பால் உயிருக்கு போராடுகிறார். அவருக்கு உதவி செய்ய வேண்டுமென்று ஒரு ஆசிரிய பெருந்தகையாவது முன்வராமையானது புனிதமான அந்த ஆசிரிய தொழிலுக்கே இழுக்கை ஏற்படுத்தும் ஈனச்செயலேயன்றி வேறு என்ன? இது போன்ற செயல்களால் ஒட்டு மொத்த ஆசிரிய குழாமையே சமூகம் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலையுள்ளது.

இந்த உப அதிபரின் மரணத்தின் போது இடம்பெற்ற சில சம்பவங்கள் நெருடலாக உள்ளன. முதலில், மரணமான ஆசிரியர் பதவியேற்க வந்த நாட்களில் பொறுப்பில் உள்ள அதிபர் பாடசாலைக்கு வருகை தராமை. இரண்டாவது, நான் உங்கள் அதிபர் அல்ல உப அதிபர்தான் என்று எவ்வளவோ மன்றாடியும், மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை. மூன்றாவது, சில ஆசிரியர்களும் ஆர்ப்பாட்டம் செய்தமை. அத்துடன் வகுப்பறைகள், வாயிற் கதவுகள் ஆகியன மாணவர்களால் இழுத்து மூடப்பட்டமை. இவையெல்லாம் சேர்த்து அந்த உப அதிபரின் உயிருக்கு எமனாகியுள்ளது.

மாணவர்கள் என்பது கள்ளமில்லா உள்ளம் படைத்தவர்கள். அப்படிப்பட்டவர்களே ஆர்ப்பாட்டம் போன்ற மூர்க்கத்தனமான செயல்களில் ஒரு அதிபரின் உயிருக்கு உலை வைக்குமளவுக்கு நடந்துகொள்ளுகிறார்கள் என்றால் அவர்களின் மனதில் விஷம் கலக்கப்பட்டுள்ளது என்றே அர்த்தம். அத்துடன் தமது அற்ப நோக்கங்களை அடைவதற்காக யாரோ ஒரு சிலர் இந்த அப்பாவி மாணவர்களை பகடையாக பயன்படுத்தியுள்ளனர் என்பதும் புலனாகிறது. அப்படி இல்லாவிட்டால் இந்தளவுக்கு அவர்கள் வன்மம் பாராட்டியிருக்கமாட்டார்கள்.

ஆகவே இந்த சம்பவம் தொடர்பாக பக்க சார்பில்லாமல் விசாரணை நடத்தப்பட்டு அநியாயமாக ஒரு உயிர் பறிபோக காரணமானவர்களையும் பிஞ்சு உள்ளங்களில் விஷ விதையை தூவி அவர்களை பகடையாக பாவித்தவர்களையும் இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். ஆசிரிய தொழில் என்பது ஓர் உயரிய தொழிலாகும். அந்த தொழிலின் மேன்மைக்கும் புனிதத்துக்கும் பங்கம் ஏற்படாமல் ஆசிரியர்களும் தமது கடமைகளை செவ்வனே செய்ய வேண்டும். ஒரு சில ஆசிரியர்கள் விடும் தவறுகளால் முழு ஆசிரிய குழாமுக்குமே இழுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது. அப்படி ஏற்பட்டால் 'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்', 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்பதெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிடும் என்று சொல்லி வைக்க விரும்புகிறோம். புனித ஆசிரியத் தொழிலில் மனிதம் மரணமாகக் கூடாது.

**தினகரனின் வெளியான ஆசிரியர் தலையங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியருக்கான தாபன விடயங்களும் லீவுகளும்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அரச சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்வது பற்றியும், அவர்களது நியமனம் தாபன வேலைகளை யார் யாரால் செய்யப்படல் வேண்டும் என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில நியமனங்கள் குடியரசுத் தலைவராலும் சில நியமனங்கள் அமைச்சரவையினாலும் இன்னும் சில பொதுச் சேவை ஆணைக்குழுவாலும் ஏனையவை அங்கீகாரம் அளிக்கப்பட்ட செயலாளர்களாலும் திணைக்களத்தலைவர்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாப்பின் 13வது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளின் அதிகாரம் 1987ம் ஆண்டின் 42ம் இலக்க சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டுள்ளன.

அதன் பின்னர் 1972ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கைக் குடியரசின் அரசியல் அமைப்பு நடைமுறையில் இருந்தது. பின்னர் 1978ல் தற்போது இருக்கும் அரசியல் அமைப்பான இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் 9வது அத்தியாயத்தில் பகிரங்க சேவை என்னும் விடயம் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசியலமைப்புக்குக் காலத்துக்கு காலம் பாராளுமன்ற 2/3 பலத்துடன் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

மாகாணசபையுடன் தொடர்புடையனவாக பின்வரும் சட்டங்கள் விளங்குகின்றன.

1. அரசியல் அமைப்பின் 6வது, 13வது, 16வது திருத்தங்கள்
2. மகாண சபைகள் சட்டம் (1987ம் ஆண்டின் 42ம் இலக்கம்)
3. மாகாண சபை ஓய்வூதியச் சட்டம்

மாகாண நிறைவேற்று அதிகாரம் இலங்கைக் குடியரசின் தலைவரால் நியமிக்கப்படும் மாகாண ஆளுனர் வசம் இருக்கும். அவரது பணியை நிறைவேற்ற முதலமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் இருப்பார்கள்.

மாகாண சபை ஒவ்வொன்றிற்கும் குடியரசுத் தலைவரால் மாகாண முதலமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னர் தலைமைச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். மாகாண சபையின் ஆட்சேர்ப்பு நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவற்றிற்கும் ஆளுநரே பொறுப்பாக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண அரசாங்க சேவை

1987ம் ஆண்டின் 13ம் இலக்க அரசியல் அமைப்புத் திருத்தத்துடன் மாகாண சபைகளை நிறுவும் முயற்சிகள் ஆரம்பமாகின. 1987ம் ஆண்டின் 42ம் இலக்க மாகாணசபைகள் சட்டத்துடன் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 32ம் பந்தியின் விதிகளுக்கு ஏற்ப மாகாண அரசாங்க சேவைகள் நிறுவப்பட்டது.

மாகாண சபையின் நிதியிலிருந்து சம்பளம் வழங்கப்படுகின்றவர்களும் மத்திய அரச சேவையில் இருந்து மாகாண சபைக்கு விடுவிக்கப்பட்ட அலுவலர்கள் அனைவரும் மாகாண அரசாங்க சேவைக்கு உரியவர்கள்.

மாகாண அரசாங்க சேவை அலுவலர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவியுயர்த்தல், ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் என்பன ஆளுனரின் பொறுப்பில் உள்ள விடயங்களாகும்.

ஆளுநரால் அவ்வதிகாரம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் ஊடாக செயற்படுத்தப்படும்.

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு தனது அதிகாரத்தை பல்வேறு உயர் அதிகாரிகளுக்கு ஒப்படைத்துள்ளது.

## பொது நிர்வாக சுற்றறிக்கைகள்

பொது சேவைக்குரிய அரச கொள்கைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஆவணமே இதுவாகும். பொதுச் சேவை தொடர்பான தாபனக் கோவையின் ஏற்பாடுகளை, அவற்றின் திருத்தங்களை சேர்ப்புக்களை அல்லது விளக்கங்களை காலத்துக்குக் காலம் அறிவிப்பனவே இவை.

1970 இன் முன் நிர்வாகப் பிரமாணங்கள் (AR) என அழைக்கப்பட்டன. 1970ன் பின் பொது நிர்வாக சுற்றறிக்கைகள் என அழைக்கப்படுகின்றன. பொது நிர்வாக அமைச்சினால் இவை வெளியிடப்படுகின்றன. 1970 இருந்து 1989 வரை ஒரே தொடரிலக்கத்தில் வெளியிடப்பட்டன. 1990ம் ஆண்டு முதல் ஒவ்வோர் வருடத்திற்கும் வெவ்வேறு தொடராக இலக்கமிடப்பட்டு வெளிவிடப்படுகின்றன.

## பொது நிர்வாக அமைச்சு

நிதி அமைச்சின் திறைசேரியின் கீழ் இயங்கி வந்த ஈ பிரிவு (தாபன வேலைகள்) அப்பிரிவு (ஒழுங்கமைப்பும் ஒழுங்கு முறையும்) ஜீ பிரிவு (ஓய்வூதியம்) என்பன 1970இல் அரசாங்க நிர்வாகத் திணைக்களம் என அமைக்கப்பட்டன. அத் திணைக்களத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாக அரசாங்க நிர்வாக அமைச்சு அமைக்கப்பட்டு இயங்கி வந்தது.

ஈ பிரிவு தாபனப் பிரிவு எனவும்
எவ் பிரிவு நிர்வாக பயிற்சி நிறுவனம் எனவும்
ஜீ பிரிவு இணைந்த சேவைகள் பிரிவு எனவும்

இவற்றுடன் ஓய்வூதிய திணைக்களமும் அமைந்து அரசாங்க நிர்வாக அமைச்சு வேறான அமைச்சாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடன் ஒன்றிணைக்கப்பட்டது.

அமைச்சின் செயலாளருடன் மேலதிக செயலாளரும் பணிப்பாளர் நாயகங்கள் இருவரும் சகல பிரிவுகளுக்காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நியமனங்கள்

ஒரு பதவிக்கு நியமனம் வழங்கப்படும் முன் பின்வருவன கவனத்தில் கொள்ளப்படும்.

1. நியமனம் செய்யப்படும் பதவி அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
2. அதற்கான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. பதவியணியில் வெற்றிடங்கள் இருக்க வேண்டும்.
4. பதவியை நிரப்பும் ரோது அதன் தேவை தொடர்ந்திருத்தல் வேண்டும்.
5. நியமனங்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.
6. நியமனம் செய்ய இருக்கும் அதிகாரி தனக்கு அந்த அதிகார முறைப்படி அதிகாரமுடையவரால் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**நியமனங்களின் தன்னைக்கேற்ப பின்வருமாறு வகைப்படுத்தலாம்.**

1. நிரந்தர நியமனங்கள்
    அ. ஓய்வூதிய உரித்துடைய நியமனங்கள்
    ஆ. நிரந்தர சேமலாப நிதிச் சலுகையுடைய நியமனங்கள்.
    இ. மாதாந்த சம்பள அடிப்படை நியமனங்கள்.

2. அமைய அடிப்படை நியமனங்கள்
    அ. பதிலீட்டு நியமனங்கள்
    ஆ. நாட்சம்பள அடிப்படை நியமனங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியமனக் கடிதம் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்

1. பெயர், பதவிப் பெயர், பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி
2. பதவியின் நிரந்தரம், ஓய்வூதியம் என்பனவும் தகுதி காண் காலம் 3 ஆண்டுகள், அக்காலம் நீடிக்கப்படக்கூடியதும் என்பதும் பற்றியும்
3. தாபனக் கோவை ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்கள கட்டளைகள், காலத்துக்கு காலம் அரசாங்க என்பனவற்றிற்கு உட்படல் பற்றியும்.
4. கடமையைப் பொறுப்பேற்ற திகதியிலிருந்தே நியமனம் செய்யப்படல் வேண்டும் என்பது பற்றியும்
5. கடமையை பொறுப்பேற்க முன்பு வைத்திய பரிசோதனைக்கு ஆட்பட வேண்டும் எக்பது பற்றியும்
6. நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்ற வேண்டும் என்பது பற்றியும்
7. தேவையேற்படின் அரச அலுவலர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை கொடுப்பதற்கும் கட்டுப்பட்டுள்ளார் என்பது பற்றியும்
8. கடமையை பொறுப்பேற்கும் போது பொது நிர்வாக படிவத்தில் உள்ளவாறு ஒப்பந்தத்தில் உட்படுத்தப்படுவார் என்பது பற்றியும்
9. அரசியலமைப்பின் 165ம் உறுப்புரையின் படி 4ம் அட்டவணையில் கொடுக்கப்பட்ட சத்தியமோ உறுதிப்பிரமாணமோ கைச்சாத்திட வேண்டும் என்பது பற்றியும்.
10. விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு செய்யக் கட்டுப்பட்டவர் என்பது பற்றியும் 2003.1.1 திகதிக்கு பின் நியமிக்கப்பட்டவர் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும்.
11. கடமையை பொறுப்பேற்கும் முன் சொத்துக்கள் வெளிப்படுத்தும் படிவத்தை நிரப்பி திணைக்களத் தலைவருக்கு கையளிக்க கட்டுப்பட்டவர் என்பது பற்றியும்
12. சம்பள அளவுத்திட்டம் சம்பள ஆண்டுப்படி ஏற்றம் திறமைகாண தடைதாண்டல்கள் என்பது பற்றியும்
13. தகுதிகாண் காலத்தில் பெவேண்டிய சம்பளப்படியேற்றம், பெறவேண்டிய பரீட்சைச் சித்தி, பெறவேண்டிய பயிற்சி என்பன பற்றியும்
14. தேவைப்படுமிடத்து கடமையைப் பொறுப்பேற்க செல்லும் போது பெறக்கூடிய புகையிரத ஆணைச்சீட்டை பற்றியும்.
15. நியமனக் கடிதம் கிடைத்தமை பற்றியும், அதில் குறிப்பிடும் நிபந்தனைகளுக்கு இசைவதாகவும் அறிவுறுத்தல் பற்றியும் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் ஒருவரின் சுயவிபரக் கோவையில் இருக்க வேண்டிய ஆவணங்கள்

1. நியமனக் கடிதம்
2. நியமனம் ஏற்றுக் கொண்ட கடிதம் அல்லது அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட சம்பவத்திரட்டு புத்தகத்தின் குறிப்பு
3. வதிவிடம் தொடர்பான கிராம சேவை அலுவலரின் அத்தாட்சிப் பத்திரம்
4. கல்வித் தகைமைகளும், தொழிற்தகைமைகளும் (சான்றிதழ்கள்)
5. மேற்படி சான்றிதழ்களை உறுதி செய்த கடிதங்கள்
6. தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி
7. சத்திய உறுதியுரை (பொது 278)
8. சேவை ஒப்பந்தம் (பொது 160)
9. மருத்துவ சோதனையாளர் அறிக்கை (பொது 169)
10. சொத்துக்களை வெளிப்படுத்தல் (பொது 261)
11. பிறப்பத்தாட்சி பத்திர மூலப்பிரதி
12. வரலாற்றுத் தாள் (பொது 53 எ)
13. வி. அ. ஓ. ஊதிய நிதியில் அங்கத்துவம் பெறும் விண்ணப்பம் (பொது 86)
14. அரச சேவையில் இருந்து நீங்காமைக்கான பிரகடனம் (பொது ஏ30)
16. விவாகச் சான்றிதழ்
17. பிள்ளைகள் பிறப்பு, மரணம் தொடர்பான விபரங்கள்
18. நிரந்தர நியமனக் கடிதம்
19. கடிதம்
20. பதவியுயர்வை ஏற்ற கடிதம்
21. மாகாண சபைக்கு உள்வாங்கப்பட்ட கடிதம்
22. சம்பள ஏற்றக் கடிதங்கள்
23. சம்பள மாற்றக் கடிதங்கள்
24. இடமாற்றக்கடிதங்கள்
25. இடமாற்ற பதவியேற்பு கடிதங்கள்
26. சம்பளமற்ற லீவுக் கடிதங்கள்
27. கடனட்டை படிவங்கள்
28. புகழுரைகள், எச்சரிக்கைகள்
29. அக்ரஹார காப்புறுதி இணைதல் கடிதம்
30. ஓய்வு விண்ணப்பமும், சேவை முற்றுப் பெறல் கடிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அலுவலர்கள் ஓய்வு பெறல் / ஓய்வு பெறச் செய்தல்

1) 55 - 60 வயதில் ஓய்வு பெறல், ஓய்வூதியப் பிரமாணம் 2.7

120 மாதங்களுக்கு மேல் திருப்திகரமான சேவை செய்து 55 வயதினை எய்தியவர்கள் ஓய்வு விதி இல. 2.17 இன் படி இளைப்பாறலாம்.

தொடர்ந்து சேவை செய்ய விரும்பினால் 57 வயது சேவை நீடிப்பு விண்ணப்பம் அனுப்பாமல் சேவை செய்யலாம். 57 வயது பூர்த்தியின் பின் சேவை செய்ய விரும்பினால் இளைப்பாறும் திகதிக்கு 6 மாதத்தின் முன்பு 1வது சேவை நீடிப்புக்கு அடுத்த சேவை நீடிப்புகளும் 3 மாதத்தின் முன்பு திணைக்கள அதிகாரியூடாக நியமன அதிகாரிக்கு விண்ணப்பித்தும் அங்கீகாரம் பெறவேண்டும். சேவை நீடிப்புக்காலத்தில் அல்லது 55 வயது பூர்த்தியின் பின் இளைப்பாற விரும்பின் 3 மாத முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

2) இளைப்பாறும் வயதின் முன் வைத்திய காரணங்களுக்காக ஓய்வு பெறல் - ஓ . பி. 2.14

திணைக்களத்தலைவரின் கோரலின் அடிப்படையில் சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நியமிக்கப்படும் மருத்துவ சபை ஒன்றினால் ஊழியர் கடமைக்கு சமூகமளிக்க முடியாமைக்குரிய உடல், உள நோய் காணப்படின் பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் பெயர் குறித்துரியமிக்கப்படும

மருத்துவ ஆலோசகர்கள் அல்லது ஆலோசகரினால் சான்றிதழ்படுத்தப்படல் வேண்டும்.

மருத்துவ சபையால் அவர் மேலும் சேவையாற்றத் தகுதியற்றவர் என குறிப்பிட்ட திகதியிலிருந்து இளைப்பாறலாம்.

3) 20 வருட சேவைக்கால பூர்த்தியினால் ஓய்வு பெறல் - ஓய்வு விதி 2.14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் ஆசிரியை, தாதி, தொலைபேசி இயக்குனர் போன்ற ஓய்வூதிய பிரமாணக் குறிப்பு 14 பிரிவில் குறிப்பிட்டுள்ள வகுதிகளைச் சேர்ந்தவர்கள் 50 வயதை அல்லது 20 வருட சேவைக்காலப் பகுதியினை பூர்த்தி செய்த பின் ஓய்வு பெறலாம்.

எவ்விதமாயினும் ஓய்வூதியப்பணிக்கொடை என்பன 55 வயது பூர்த்தி செய்த பின்பே வழங்கப்படும் சுற்றறிக்கை 30/88

4) ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக ஓய்வு பெறச் செய்தல் ஓ. வி. 2.14

ஒழுக்காற்றுக் காரணத்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு பதிலாக காருண்ய அடிப்படையில் எப்பொழுதும் ஓய்வு பெறச் செய்யலாம்.

சேவைக்காலத்தில் ஏற்பட்ட ஒழுங்கீனம் அல்லது கவலையீனத்தால் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படினும், மேற்கொள்ள உத்தேசிக்காத விடத்தும் திணைக்களத்தலைவரின் அறிக்கையின்படி ஓய்வூதியத்தை அல்லது ணிக்கொடையை அல்லது வேறு ஏதாயினும் கொடுப்பனவை, குறைக்கவோ நிறுத்தவோ உள்ள தத்துவத்தைர் பொது நிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கொண்டிருப்பார்.

5) அரச கரும மொழி அடிப்படையில் ஓய்வு பெறலாம். - ஓ. வி. 2.48(1)

அரசாங்கத்தின் அரச கருமமொழிக்கொள்கையின் நோக்கத்திற்கேற்ப சிங்கள மொழியில் கருமமாற்ற தாம் இயலாதவர் கருதும் முன்னர் ஓய்வூதியத்திற்குரிய சேவையில் நியமிக்கப்பட்ட அலுவலர் ஓய்வு பெற விண்ணப்பித்து அங்கீகாரம் பெறப்படின் ஓய்வு பெறலாம்.

பொ. நி. க. இல - 17/91 - 91/08/23

6) திறமையின்மைக்காக ஓய்வு பெறச்செய்தல் - ஓ. வி. 2.15

அரசாங்க ஊழியர் ஒருவர் பொதுவான திறமையின்மைக்காக சேவையில் இருந்து நீக்குவதற்குப் பதிலாக அல்லது பதவியை வெறிதாக்குவதற்குப் பதிலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதாபரீதியான மாற்று நடவடிக்கையாக கட்டாய ஓய்வு பெறச் செய்யலாம்.

7) குவியில்லாதொழிக்கப்படுவதனால் இளைப்பாற்றப்படல்

அரசாங்க கொள்கையின் அடிப்படையில் திணைக்களங்கள் இல்லாதொழிக்கப்பப்படல், மிகைப்பணியாள் தொகுதியை நீக்குதல் என்பவற்றின் அடிப்படையில் பதவிகளை இல்லாதொழிப்பதனால் அலுவலர்கள் இளைப்பாற்றப்படுகிறார்கள்.

இதனடிப்படையில் 10 வருடத்தின் மேல் சேவை செய்தவருக்கு மேலும் 5 வருடங்கள் சேவை செய்ததாக கணிக்கப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்படலாம்.

பதவி துறத்தல் : தா. கோ. அத் 4 பிரிவு 4

அலுவலர் ஒருவர் திணைக்களத்தலைவருடாக நியமன அதிகாரிக்கு விண்ணப்பித்து பதவி துறக்கலாம். அப்போது 1 மாத முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும். ஒரு மாத முன்னறிவிப்பு கொடுக்க இயலாதவிடத்து ஒரு மாத சம்பளத்தை கொடுத்த பின்

விலகலாம். அவ்வாறு விலகிய ஒருவர் மீண்டும் சேவையில் சேரலாம். ஆனால் முன்னைய சேவையின் நலன்களை அனுபவிக்க முடியாது.

சேவையைத் துறந்தவர் நியமன அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படாத விடத்து, கடமைக்கு சமூகமளிக்காமல் விட்டால் அவர் தாமாகவே பதவியை விட்டு நீக்கியமையாக கருதி பதவிவெறித்தாக்கல் நடைபெறும்.

நியமன அதிகாரி ஏற்றுக் கொண்டால் துறக்கப்படும் ஓய்வூதிய காலம், பணிக்கொடை போன்ற வேறு நலன்கள் அனைத்தையும் இழந்துவிடுகிறார் என திணைக்களத் தலைவர் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

பதவி வெறித்தாக்கல் : தா. கோ. அத் 2. பிரிவு 5 உபபிரிவு 7

காரணமின்றி, விண்ணப்பிக்காமல் கடமைக்கு சமூகமளிக்காத உத்தியோகத்தர் ஒருவர் பதவி வெறிதாக்கியதாக கருதி திணைக்களத்தலைவரால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம் வழங்கப்பட வேண்டும். அவ்விதம் பதவி வெறித்தாக்கப்பட்டவர் தாமாகவே முன்வந்து சரியான காரணங்களுடன் நிர்ணயிப்பாராயின் ஒழுக்காற்று அதிகாரி அவர்கடமை ஏற்பது பற்றி தீர்மானிப்பார்.

## ஆசிரியர்களுக்கான லீவுகள் (விடுமுறைகள்)

அரச அலுவலர்கள் பெறக்கூடிய விடுமுறைகள் ற்றி தாபனக்கோவை அத்தியாயம் XII தெளிவாகக் கூறுகின்றது. ஆசிரியர்களின் விடுமுறை பற்றி தா. கோ. அத். XII பிரிவு 24 விளங்குகின்றது. அத்துடன் காலத்துக்கு காலம் வெளியிடப்படும் பொது நிர்வாக அமைச்சின் சுற்றிநிருபங்களும் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்களும் ஆசிரியர் விடுமுறை பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளன. கல்வித் திணைக்களத்தினால் 1963இல் வெளியிடப்பட்ட (Manual of instructions) கொள்ளை நூலின் அத்தியாயம் III இன் 3ம் பிரிவு ஆசிரியர் விடுமுறை பற்றி விளக்குகிறது.

பாடசாலை ஒன்றின் அதிபர் ஒவ்வொருநாளும் தனது பாடசாலையில் வேலை செய்யும் பணியாளர்கள் ஒவ்வொருவரும்,

1. உரிய நேரத்திற்கு சமூகமளித்தல்
2. பாடசாலை முடியும் வரை கடமையில் ஈடுபடல்
3. தினசரி வரவுப் பதிவேட்டில் கையொப்பமிட்டு வந்த நேரத்தையும், பாடசாலை முடிவடைந்து புறப்படும் நேரத்தையும் பதிவு செய்தல்.

என்பனவற்றை அறிவுறுத்தப்பட்ட பிரமாணங்களுக்கு ஏற்ப நடைபெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பாடசாலை ஆரம்பமாகி 15 நிமிடத்தில் வரவுப் பதிவேட்டினை மூடிவிட வேண்டும். ஆயினும் பாடசாலை ஆரம்பமாகி 30 நிமிடத்துள் வரும் ஆசிரியரை கடமைக்கு அனுமதிக்கலாம். இவ்விதம் மூன்று தடவை தாமதமாக (பாடசாலை தொடங்கி 30 நிமிடத்துள்) வரும் ஆசிரியருக்கு அரை நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

பாடசாலை தொடங்கி 30 நிமிடத்துக்குப் பின்பு வருபவர் அரைநாள் கடமைக்கு மட்டுமே உரித்துடையவர். எவ்விதமாயினும் அரைநாள் லீவு பெற உள்ளவர் பாடசாலை வேலை நேரத்தில் 1/2 பகுதிக்கு மேல் கடமை புரிந்திருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். விடுமுறை என்பது ஒரு சலுகையே தவிர உரிமையல்ல என தா. கோ. XIIம் அத்தியாயத்தில் பிரிவு 1.1 கூறுகின்றது.

விடுமுறை வழங்கும் அதிகாரிக்கு அனுமதிக்கப்பட்ட விடுமுறையை சேவையின் அவசியம் கருதி இரத்துச் செய்யும் உரிமையும் உண்டு.

### விடுமுறை விண்ணப்ப காலம்

தா. கோ. XIIம் அத்தியாயம் 1.3 பிரிவின்படி விடுமுறை விண்ணப்பங்கள் சாதாரணமாக விடுமுறை அனுமதிக்கும் அதிகாரிக்கு விடுமுறை ஆரம்பிப்பதற்கு 7 நாட்களுக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். என்று கூறப்படுகிறது. ஆனால் ஆசிரியர்களுக்கான விடுமுறை பற்றிய கல்வித்திணைக்கள அறிவுறுத்தல் கையேடு (1963 – 98வது பந்தி) நோயின் அடிப்படையில் விடுமுறையாயின் 3 நாட்களுக்கு முன்புவிண்ணப்பிக்க வேண்டும். வேறு காரணங்களுக்காயின் 5 நாட்களுக்கு முன்பு அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

வெளிநாட்டுக்கு செல்லும் காரணத்திற்கான விடுமுறையாயின் 3 மாதங்களுக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும்.

நடைமுறையில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன எவ்விதமாயினும் விடுமுறை அனுமதி பெற்றுக்கொள்வது நியதிப்படி மட்டுமல்ல ஆசியர்களைப் பொறுத்தளவில் மாணவர்களின் நேரத்தை பாதிக்காவண்ணம் அதிபர் பதிலீடுகள் செய்து கொள்ளும் அளவிற்கு விடுமுறை விண்ணப்பங்களை அனுப்பி அனுமதி பெற்றுக் கொள்ளும் தார்மீகக் கடமை அவர்களுக்கு உண்டு.

### விடுமுறைகள் 3 முறைகள் விண்ணபிக்கலாம்

1. நேரடியாக விண்ணப்பத்தினை அதிபரிடம் கையளித்தல்
2. தந்தி மூலம் விண்ணப்பித்தல், அவசர தேவையின் நிமிர்த்தம் தந்தி மூலம் அறிவித்தால் பதிலுக்கு பணம் செலுத்திய தந்தியாக இருத்தல் வேண்டும்.
3. தொலைபேசி மூலம் அறிவித்தால் உறுதிப்படுத்த எழுத்து மூல விண்ணப்பத்தினால் உறுதிப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறை விண்ணப்பங்கள் இலங்கைத் தீவுக்குள்ளாயின் பொது 125 அ. வில் விண்ணப்பிக்கலாம். அல்லது அதன் சாராம்சங்கள் கொண்ட விண்ணப்பப்படிவம் பாடசாலை ஆசிரியரால் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படலாம். இரு படிவங்களில் விண்ணபிக்க வேண்டும். ஒரு படிவம் அனுமதிக்கப்பட்டு அல்லது அனுமதி மறுக்கப்பட்டு ஆசிரியருக்கு மீளளிக்கப்பட வேண்டும். (அறிவுறுத்தல் பதிவேடு 1963 பந்தி 98)

விடுமுறை தொடர்பாக சா. ப. /ப/3/11/305 ம் இலக்க 1974.08.22ம் திகதிய சுற்றுநிருபம் கூறுகின்றது.

4/அ/குரு/2/61ம் இலக்க 1982.07.12ம் திகதிய சுற்றுநிருபம் எழுதப்பட்ட அல்லது பிரதி பண்ணப்பட்ட விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படலாம் என குறிப்பிடுகின்றது.

நடைமுறையில் ஒரு பிரதியில் விண்ணப்பிப்பது மட்டுமே காணப்படுகின்றது.

2. நாட்டிற்கு வெளியே செல்வதாயின் பொது 126 படிவம் பயன்படுத்தப்பட வேண்டும். அது 3 பிரதிகளில் கடவைச்சீட்டு நிழற்பட பிரதி, ஆள் அடையாள அட்டையின் நிழற்பட பிரதி என்பன இணைக்கப்பட்டுிண்ணப்பிக்கப்பட வேண்டும்.

**விடுதலை பதிவேடுகள்**

அனுமதிக்கப்பட்டுப் பெறப்பட்ட விடுமுறைபடிவங்கள் கோவையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். தினசரி வரவு இடாப்பில் குறிக்கப்பட வேண்டும்.

பின்னர் விடுமுறைப்பதிவேடு பொது 190இல் பதிந்து கொள்ள வேண்டும்.

லீவுகள் பற்றி அறிவிப்பதற்கு பி. 100 படிவம் பயன்படுத்தப்படல் வேண்டும். அலுவலகத்திற்கு அறிவிக்கும் போதும் மாற்றலாகி செல்லும் பாடசாலைகளுக்கு. விடுமுறை விபரங்களை அறிவிக்கவும் இவற்றையே பயன்படுத்த வேண்டும்.

விடுமுறைகள் பலவகைப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. குறுங்கால லீவு
2. அமைய லீவு
3. சுகவீன லீவு
4. கடமை லீவு
5. பிரசவ லீவு
6. பிணிகளுக்கான விசேட லீவு
7. கல்வி அல்லது படிப்பு லீவு
8. வெளிநாடு செல்வதற்கான லீவு
9. சம்பளமற்ற லீவு
10. கடந்தகால லீவு - 10.01.01 of XII
11. கடமையின் போது விபத்துக்கான விசேட லீவு
12. விடுமுறை லீவு
14. இத்தா லீவு
15. முஸ்லீம்களுக்கான விசேட லீவு

பாடசாலை அதிபரைப் பொறுத்தளவில் குறுங்கால லீவு, அமைய லீவு, சுகவீன லீவு என்பவற்றை மட்டுமே அனுமதிக்க அதிகாரமுடையவர் ஏனைய லீவுகளை அவரே சிபார்சு செய்து வலயக்கல்விப் பணிப்பாளருக்கு / கோட்டக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பும் கடமை உடையவர்.

சிபார்சு செய்யும் லீவுகளைப் பொறுத்தளவில் சில அதிபர்கள் பயப்படுவதையும் அதனால் ஆசிரியர்களுடன் முரண்படுதையும் அவதானிக்க முடிகின்றது. சியான முறையில் சிபார்சு செய்யவது மட்டுமே அவரது பொறுப்பாகும் என்பதனை அவர்கள் கவனத்தில் கொண்டால் அத்தகைய முரண்பாடுகள் ஏற்பட இடமில்லை.

மற்றைய அரச அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தொடர்பான விடயங்பளில் சில வேறுபாடுகள் அமைகின்றன. அதற்குப் பல காரணங்களும் உள்ளன. முக்கிய காரணமாக அமைவது கடமை புரியும் காலவேறுபாடாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.2 குறுங்கால லீவு

அமைய லீவுக்குப் பொருத்தமான மிக அவசர காரியங்களுக்கு இந்த லீவு வழங்கப்படலாம். ஒரு மணித்தியாலம் கொண்ட ஆகக் கூடிய இருதடவைகள் ஒரு மாதத்தில் அனுமதிக்கப்படலாம். ஆசிரியர்களுக்கு ஒரு மணித்தியாலமும் ஆசிரியர் அல்லாதவர்களுக்கு இது 1 1/2 மணித்தியாலங் கொண்டதாக அமையும். இந்த லீவை வழங்கும் போது சம்பவப் பதிவேட்டிலும், குறுகிய கால லீவு நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட பதிவேட்டிலும் பதிந்து கொள்ளல் வேண்டும். குறுகிய கால லீவு அதிபரின் தற்துணிவின் அடிப்படையிலேயே வழங்கப்படும். அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பயன்படுத்துவது சிறந்தது. குறுகிய கால இடாப்பில் அவரவர் பெயருக்கு ஒதுக்கிய பக்கத்தில் அதிபரின் சுருக்க ஒப்பமிட்டு அனுமதி வழங்கப்படலாம்.

1.2. அரை நாள் லீவு ஆசிரியர்களுக்கு 1 மணித்தியாலயம் மட்டும்

மொத்தப்பாடசாலை நேரத்தில் அரைப்பங்கு நேரத்திற்கு கடமையாற்றக் கூடியவாறு அரைநாள் வழங்கப்படலாம். ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரை மதிய உணவு இடைவேளை போக மூன்றரை மணித்தியாலங்கள் சேவையாற்றிருக்க வேண்டும்.

1.3. கடமைக்கு தாமதித்து வருதல்

ஒரு மாத்தில் மூன்று தடவைகள் (நாட்கள்) 30 நிமிடத்திற்கு மேற்படாமல் தாமதித்து பாடசாலைக்குச் சமூகமளித்தால் அரைநாள் லீவாகக் கணிக்கப்படுதல் வேண்டும். அரை மணித்தியாலத்திற்கு மேல் தாமதிப்பின் அரைநாள் லீவாகக் கருதப்படும்.

2) அமைய லீவு

நிரந்தர பதிவுடைய ஆசிரியர் வருடத்தில் 21 நாட்கள் அமைய லீவைப் பெற முடியும். ஒரு தடவையில் 6 நாட்களுக்கு மேல் இந்த லீவைப் பெற முடியாது.

பின்வரும் காரணங்களுக்காகவே லீவைப் பெறலாம்

1. ஆசிரியரின் சுகவீனம்
2. குடும்ப அங்கத்தவரின் சுகவீனம், மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப அங்கத்தவர் என்பது கணவன், மனைவி என்போர்களின் இரத்த உறவு முறையை மட்டுமே குறிப்பிடுகின்றது.

3. நீதி மன்ற வழக்கு

4. அரசாங்க நேர்முகப் பரீட்சை

5. ஆசிரியரின் விவாகம்

6. அரசாங்க மொழி பரீட்சைகள், பட்டப் பரீட்சைகள் மற்றும் காலத்துக்கு காலம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட லீவு பெறுவதற்கான காரணங்கள்.

3) சுகவீன லீவு

வருடத்தில் 20 நாட்கள் சுகவீனம் லீவாகப் பெற முடியும். இரு நாட்களுக்கு மேலாயின் வைத்திய அதிகாரியின் சான்றிதழ் வேண்டும்.

அரச வைத்திய அதிகாரியிடமிருந்து Medical 170 பத்திரத்தில் கழிவுச் சான்றிதழ் பெறவேண்டும். அல்லது ஆயுர்வேத வைத்தியரிடமிருந்து ஆயுர்வேதப் படிவம் 44ல் லீவுச் சான்றிதழ் பெறவேண்டும். அல்லது வைத்திய சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வைத்தியரின் சான்றிதழ் பெறவேண்டும்.

14 நாட்களுக்கு மேலாயின் அரச வைத்திய அதிகாரியிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும் என்ற விதி பொது. நி. நி. இல. 27/92-07.10.92ன் மூலம் நீக்கப்பட்டு தனியார் வைத்திய சான்றிதழை 14 நாட்களுக்கு மேலான லீவுகளுக்கும் சமர்ப்பிக்கலாம்.

4) கடமை லீவு

பின்வரும் கடமைகளுக்காக மட்டும் கடமை லீவு வழங்கப்படலாம்.

1. கல்வி அமைச்சு / திணைக்களம் / கல்வி அலுவலகம் என்பவற்றின் ஒழுங்கு செய்யப்படும். கருத்தரங்கு, பயிற்சி வகுப்புக்கள், செயலமர்வுகள் போன்றவற்றிற்குச் செல்ல.

2. மாகாண/ மாவட்ட ரீதியான விளையாட்டுப் போட்டிகள் இணைபாடவிதான நிகழ்வுகளில் கடமை புரிய

3. பரீட்சை மேற்பார்வை, பரீட்சைத்தாள் திருத்தல் வேலைகளுக்கு

4. சேவைக்கால பயிற்சி வகுப்புகளில் பங்குபெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மருத்துவ பரிசோதனைக்கு 3 நாட்கள்

6. அரச தரப்பு வழக்கு/ யூரி சேவை

7. விஷேட பொலிஸ், இராணுவ சேவை

8. தொழிற் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

9. மற்றும் கல்வி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட கடமைப் பொறுப்புக்கள்.

கடமை லீவு வலயக்கல்விப் பணிப்பாளர்/ கோட்டக்கல்வி அதிகாரி என்போரால் அனுமதிக்கப்படல் வேண்டும். லீவு விண்ணப்பத்தின் இரு பிரதிகளுடன் வரவுச் சான்றிதழும் சமர்ப்பித்து இந்த லீவு பெறவேண்டும். எவ்விதமாயினும் முன் அறிவித்தல் வழங்கியிருக்க வேண்டும்.

## 5) பிரசவ விடுமுறை

தாபனக் கோவை அத்தியாயம் ஓஐஐ – 18 பொ. நி. சு. நி 16/96

5.1. முதல் இரு உயிருள்ள பிரசவங்களுக்கும் 12 வார கால முழுச் சம்பளத்துடனான லீவு, அடுத்து வரும் உயிருள்ள பிரசவங்களுக்கு 6 வார கால முழுச் சம்பள லீவு. குழந்தை பிறந்து 4 வார காலம் கடக்கு முன் உத்தியோகத்தர் திரும்பவும் சேவைக்கு வர அனுமதிக்கப்படமாட்டார். இந்த லீவைப் பெறுவதற்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரம் அல்லது குழந்தையின் பிறப்புச் சாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பயிலுனருக்கு இந்த லீவுக்கு உரித்துடையவர்.

5.2. இந்த லீவைக் கணிக்கும் போது, சனி, ஞாயிறு, அரசாங்க விடுமுறை நாட்கள் கணக்கில் கொள்ளப்படமாட்டாது. வேலை நாட்கள் மட்டுமே கணிக்கப்படுதல் வேண்டும். எனினும் பாடசாலை தவணை விடுமுறை நாட்களுக்குள் வரும் வேலை நாட்கள் யாவும் குறித்த 84/42 தினங்களுக்குட்பட்டதாக கருதப்படும்.

5.3. இந்த லீவு காலம் ஆசிரியரது ஏனைய லீவு நாட்களிலிருந்து கழிக்கப்படாது விசேட லீவு வழங்கப்படும்.

5.4. குழந்தை இறந்து பிறந்தால் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் அல்லது குழந்தையின் மரணச் சான்றிதழ் சமர்ப்பிக்கும் பட்சத்தில் 4 வார கால விசேட லீவு வழங்கப்படும்.

5.5. கருச்சிதைவு காரணமாக பிரசவ லீவு வழங்கப்படமாட்டாது. சுகயீன லீவாக இது கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.6. பிரசவ லீவு முடிந்து குழந்தை ஐந்து மாத பருவத்தை அடையும் வரை பாலூட்டுவதற்காக தினமும் ஒரு மணிநேரம் முந்திப் பாடசாலையை விட்டு செல்வதற்கு அனுமதிக்கப்படலாம்.

6) காசரோகம், கான்சர் , தொழுநோய் போன்ற வியாதிகளாற் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு விசேட லீவு

(தாபன கோவை அத்தியாயம் 12:8, அத்தியாயம் என்பன)

ஒரு நிரந்தர உத்தியோகத்தர் அல்லது ஒரு வருட சேவை பூர்த்தி செய்துள்ள தற்காலிக உத்தியோகத்தர் அல்லது தொடர்ந்து ஒரு வருடம் சேவையாற்றியுள்ள நாட்சம்பள ஊழியர் ஒரு வைத்திய பரிசீலணைக்குழு அன்னார் மீண்டும் சேவைக்கு வரக்கூடிய சாத்தியக்கூறு உண்டெனச் சிபார்சு செய்யுமிடத்து:

காசரோகம் : முதலில் ஒன்பது மாத விசேட லீவு. இதன் பின் 4 வருட காலம் சேவை செய்திருப்பின் மீண்டும் 9 மாத லீவு.

தொழு நோய் : 22 மாதங்களுக்கு மேற்படாத விசேட லீவு

கான்சர்: மொத்தமாக ஆறு மாதங்களுக்கு மேற்படாத விசேட லீவு.

7) முழுச்சம்பளத்துடனான கல்வி லீவு

கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் கல்வி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படலாம்.

7.1. அரசாங்க செலவில் வழங்கப்படும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு புலமைப்பரிசில்கள்

7.2. திணைக்கள அனுமதி பெற்ற ஏதேனும் புலமைப்பரிசில்

7.3. பட்டப்படிப்பு டிப்ளோமா ஒரு வருடம்

7.4. குறிப்பிட்ட பட்டப்பாடம் தொடர்பாக மூன்று வருட கல்வி லீவு

7.5. பட்டப்படிப்பு, கல்வி டிப்ளோமா இடைக்காலப் பாடநெறி அல்லது திறந்த பல்கலைக்கழக தபால் மூலப் படிப்பை மேற்கொள்ளும் ஆசிரியர் பயிற்சி நெறிக்கு ஒரு நாள் வீதம் பரீட்சைக்காக பரீட்சை தினத்தன்றும் முந்திய இரு வாரங்களும் கடமை லீவு அனுமதிக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.6. இவை தவிர அவ்வப்போது கல்வி அமைச்சினால் அங்கிகரிக்கப்படும் படிப்பு வீதங்களும் அனுமதிக்கப்பட வேண்டும்.

## 8) வேலைவாய்ப்பு நிமித்தம் வெளிநாட்டு லீவு
## (தாபனக் கோவை அத்தியாயம் XII – 16)

8.1 முதலில் மூன்று வருடமும், அதைத் தொடர்ந்து மேலும் இரு வருடமுமாக மொத்தம் ஐந்து வருடங்களுக்கு சம்பளமற்ற லீவு வழங்கப்படலாம்.

8.2 சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட நிரந்தர உத்தியோகத்தராதல் வேண்டும்.

8.3 வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றமை பொருத்தமான ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

8.4 வெளிநாட்டில் செலவிடும் காலத்தைப் போன்று இரு மடங்கு காலம் மீண்டும் சேவையிலீடுபடுவதாக உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். (ஓய்வு பெறும் காலம் கவனத்திற்கெடுக்கப்படுதல் வேண்டும்)

8.5 லீவு அமைச்சின் செயலாளரால் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

8.6. லீவு அனுமதிக்கப்படு முன் திணைக்களத்திற்குப் பாக்கியாகவுள்ள சகல முற்பணங்களும், வருமதிகளும் தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.

8.7.வெளிநாட்டில் செலவிட்ட காலம் இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்துடையதாகமாட்டாது.

8.8. அக்காலத்திற் கிடைத்திருக்கக் கூடிய சம்பள உயர்வுகள் சேவைக்குத் திரும்பிய பின் வழங்கப்படலாம்.

8.9. அக்காலத்தில் கிடைத்திருக்கக் கூடிய பதவி உயர்வுகள் வழங்கப்படமாட்டா.

## 9) கடந்தகால லீவு (Lassed Leave)

ஒரு ஆசிரியரது நடப்பு வருட சுகயீன லீவு யாவும் முடிந்த நிலையில் சுகயீனம் காரணமாக மேலும் லீவு தேவைப்படின் அவருக்கு வாசியான ஏதாவது இரண்டு வருடங்களுக்காக (அவரால் அவ்வருடங்களில் அனுபவிக்கப்படாது எஞ்சியுள்ள) கடந்த கால லீவை அனுமதிக்கலாம். (தாபனக் கோவையின் அத்தியாயம் XII – பந்தி 10–பொ. நி. சு. நி. 352 இன் திருத்தம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) விபத்து லீவு

ஒரு வைத்திய பரிசீலனைக் குழுவின் சிபார்சின் கீழ் ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு அமைச்சின் செயலாளரால் முதல் ஒரு வருட காலத்திற்கு முழுச் சம்பளத்துடனும், அடுத்து வரும் ஆறு மாத காலத்திற்கு அரைச் சம்பளத்துடனான விசேட லீவு வழங்கப்படலாம். (முழு விபரங்களுக்கும் பொ. நி. சு. நி 352, 382 ஐப் பார்க்கவும்)

11) விடுமுறை லீவு ( Vacation leave)

ஆசிரியர்களைப் பொறுத்த வரை பாடசாலைத் தவணை விடுமுறை நாட்களே ஓய்வு விடுமுறை நாட்களாகும். ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒரு வருடத்திற்கு 24 நாட்களுக்கு மேற்படாத ஓய்வு விடுமுறைக்கு உரித்துடையவர்.

12) விசேட சுகயீன லீவு

தமது கடமையோடு தொடர்புடைய வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போது அதன் பிரதிபலனுக்கு ஏதாவது நோய்வாய்ப்படும் உத்தியோகத்தருக்கு அரசாங்க வைத்திய உத்தியோகத்தொருவரின் வைத்திய சான்றிதழ் சமர்ப்பிக்கும் பட்சத்தில் முதல் ஆறுமாத காலத்திற்கு முழுச் சம்பள லீவும் அடுத்து வரும் ஆறு மாத காலத்திற்கு அரைச் சம்பள லீவும் அமைச்சின் செயலாளரால் அனுமதிக்கப்படலாம். (பொ. நி. சு. நி. 352)

13) முஸ்லீம் பெண் ஆசிரியைகளுக்கு இத்தா லீவு

கணவனை இழந்த விதவை இஸ்லாமியப் பெண் ஆசிரியைகள் இத்தா அனுஷ்டிப்பதற்காக 4 மாதம் 10 நாட்களுக்கு முழுச்சம்பளத்துடன் இத்தா லீவு பெறலாம். இத்தா லீவு ஆசிரியையின் கடந்த கால லீவிலிருந்து கழிக்கப்படும். கழிக்க முடியாத கால லீவு விசேட லீவாக கருதப்படும். (கல்விச் செயலாளரின் சுற்றறிக்கை 13/1/86, தாபனக் கோவை XII - 12:12)

14) முஸ்லீம் உத்தியோகத்தருக்கு வெள்ளிக் கிழமைகளில் தொழுகைக்கான விசேட லீவு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பி. ப. 12.15 முதல் 2 மணித்தியாலத்திற்கு மேற்படாத விசேட லீவு திணைக்களத் தலைவரின் தற்துணிவின் கீழ் வழங்கப்படலாம். தேவையான போது அவ்வுத்தியோகத்தர் வேலை நேரங்களுக்குப் பின் வேலை செய்யுமாறு கேட்கப்படலாம். (தாபனக் கோவை அத்தியாயம் XII - 12)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஆசிரியர் சேவைச் சம்பள அளவுத்திட்டம்

2004.01.01ம் திகதி தொடக்கம்

| வகுப்பு | தரம் | சம்பள அளவுத்திட்டம் |
|---|---|---|
| 3 | 11 | 60,900 -14/1320-6/1560-88,740 |
| 3 | 1 | 70,140 -9/1320-8/1560-94,500 |
| 2 | 11 | 82,320 -12/2460-11,1860 |
| 2 | 1 | 105,420 -7/3000-12,6420 |
| 1 | | 132,960-10/5520-19,0160 |

புகையிரத ஆணைச்சீட்டு வகுப்புகளும்

அதற்குரிய சம்பள அளவுத்திட்டங்களும்

2004.01.01.ஆந் திகதி தொடக்கம்

| வகுப்பு | வருடாந்த சம்பள அளவுத்திட்டம் |
|---|---|
| 1 | ரூ. 100, 440/-ம் அதற்கு மேலும் |
| 2 | ரூ. 77, 440/-ம் தொடக்கம் 100,339 வரை |
| 3 | ரூ. 77, 339/-ம் அதற்கு கீழான சம்பளமும் |

இணைந்த படிகள்

2004.01.01 ஆந் திகதி தொடக்கம்

| வருடாந்த சம்பளம் | இணைந்த படிகள் ஒரு நாளுக்கு |
|---|---|
| ரூ.57,720/-க்கு குறைான | 150/- |
| ரூ. 81,300/-க்கு கறைவான<br>ரூ. 133, 439/- க்கு குறைவான | 180/-<br>230/- |
| | 280/- |

**தொகுப்பு**

**திரு. ந. சந்திரகாந்தன்**

**பாடசாலை மேம்பாட்டுத் தொழில்நுட்ப ஆலோசகர்**

**கிழக்கு மாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்

எங்கள் அன்புத்தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு வீடு வந்து ஆறுதல் வார்த்தை தெரிவித்தோருக்கும், தொலைபேசி மூலமாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்து அழைப்பிதனை ஏற்படுத்தி ஆறுதல் கூறியவர்களுக்கும் எம்மோடு கூட இருந்து உதவிகள் பல புரிந்த அயலவர்களுக்கும், பொதுமக்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய அலுவலகங்கள், பாடசாலைகள் அனைத்திற்கும் அங்கு கடமைபுரியும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மற்றும் இரவு பகலாய் கண்விழித்து உதவி புரிந்தவர்களுக்கும், இறுதிக் கிரிகைகளுக்காய் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்து அஞ்சலி செலுத்திய அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மேலும் நினைவு மலரை ஆக்குவதற்கு உதவி புரிந்த அத்தனை உள்ளங்களுக்கும், இந் நினைவு மலரை குறுகிய காலத்தில் அச்சிட்டு தந்த அஸ்ரா நிறுவன பணிப்பாளர், மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுதவியவர்களுக்கும், அஞ்சலி உரைகளை வழங்கியோருக்கும் முப்பத்தோராம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டோருக்கும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நன்றி

என்றும் அன்புடன்
குடும்பத்தார்
24, கோணேசபுரம் உவர்மலை
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINCIPAL
TAMIL MAHA VIDYALAYAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org